Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 06 (30.12.2003) செவ்வாய்க்கிழமை இதழ்:90




## குடாநாட்டில் படையினரால் கைதாகி

# காணாமற் போனோரின் உறவினர்கள் கொழும்பில் நீதியமைச்சு முன் மறியல்!

(கொழும்பு)

**யாழ்.குடாநாட்டில் 1996/1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்தோர், நீதி அமைச்சின் முன்பாக நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

மறியற்போராட்டத்தை நடத்திய காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர்களை கலைந்து செல்லுமாறு அங்குவந்த பொலிஸார் கோரினர். இருந்தபோதும், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினரும், யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினரும் சேர்ந்து அங்கு நின்ற பொலிஸாரிடம் தமது மன உணர்வுகளை சமாதான வழிமூலம் தெரியப்படுத்துகின்றோம் எனத் தெரிவித்தனர்.

அதன் பின்னர் காணாமற்போனோர் சங்கத் தலைவர் சற்குணம் மற்றும் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த எஸ்.கனகாம்பிகை இருவரையும், அவர்கள் கொண்டு வந்த மகஜர்களை

(10 ஆம் பக்கம் பார்க்க)


நீதி அமைச்சின் முன் மறியல் நடத்தும் காணாமற்போனோரின் உறவினர்கள்

## ஜே.வி.பி. - சுதந்திரக் கட்சி ஒப்பந்தம் சுதந்திர சதுக்கத்தில் கைச்சாத்தாகும்

(கொழும்பு)

நீண்டகாலப் பேச்சுக்களுக்குப் பின்னர் - ஜே.வி.பிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான இறுதி உடன்படிக்கை சுதந்திரசதுக்கத்தில் வைத்து எதிர்வரும் ஜனவரி 21 ஆம் திகதி கைச்சாத்திடப்படவுள்ளது.

கூட்டணி தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதும் - புதிய பெயர், புதிய சின்னம் என்பவற்றின் அடிப்படையில் புதிய கூட்டணி செயற்படவுள்ளது.

இந்தக் கூட்டணியில் இருகட்சிகளுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும் பதவிகள் குறித்தும் இறுதிமுடிவு எட்டப்பட்டிருக்கிறது. இதன்படி புதிய கூட்டணியின் தலைமைப் பதவியும், நான்கு முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களும் ஜே.வி.பிக்கு ஒதுக்கப்படவுள்ளது. இவற்றுள் விவசாய அமைசசும் அடங்கும்.

இதேவேளை, கூட்டணியின் செயலர் பதவி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டு, அந்தப் பதவியை ஜனாதிபதி சந்திரிகாவே வகிக்கவுள்ளார்.

கூட்டணியின் பெயர், சின்னம், வர்ணம் ஆகியன தொடர்பாக இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, இந்தக் கூட்டணியில் இடம் பெறுவது குறித்து லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன என்ன முடிவு எடுக்கவுள்ளன என்பது குறித்து அறிவிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கேட்டுள்ளார்.

## முஸ்லிம் இளைஞர்களுக்கு அம்பாறையில் ஆயுதப்பயிற்சி!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் இளைஞர்கள் இரண்டு இடங்களில் ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டுவருவதாக மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் 'தமிழ்அலை' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அட்டாளைச்சேனை - சதக்காவடி என்ற இடத்திலும், இறக்காமம் - அமீர் அலிபுரம் முன்பாகவுள்ள பள்ளிவாசல் வளாகத்திலும் இந்த ஆயுதப் பயிற்சி தினமும் காலையில் வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. சுமார் 300 இளைஞர்கள் இந்தப் பயிற்சியைப் பெற்றுவருகிறார்கள்.

முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதப் பயிற்சி பெற்றுவருவது குறித்து தமிழ்மக்கள் அச்சமடைந்திருப்பதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## மதமாற்ற தடைச் சட்டத்தை கொண்டுவருமாறு புத்த பிக்குகள் சாகும்வரை உண்ணாவிரதம்!




(கொழும்பு)

மதமாற்றத்துக்கு எதிரான சட்டத்தை அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்த வேண்டுமெனக்கோரி, தேசிய புத்த பிக்குகளின் சங்கத்தைச் சேர்ந்த பிக்குகள் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுக்காலை இவர்களின் போராட்டம் கொழும்பிலுள்ள புத்த சாசன அமைச்சுக்கு முன்னால் ஆரம்பமாகியது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்ரின் தலைமையிலான குழு அரசாங்க அதிபரைச் சந்தித்தது!

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தலைமையிலான உயர் மட்டக்குழு - நேற்று யாழ்.அரச அதிபரை சந்தித்து கலந்துரையாடியது.

நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், ஒஸ்ரின் பெர்ணாண்டோவுடன் பிரதமரின் ஆலோசகரான வெரகொட சிவானந்தன் மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜன், சிரான் அமைப்பின் இயக்குநர் செல்வின் இறோனியஸ், திருமலை மாவட்ட திட்டமிடல் இயக்குநர் சுவாமிநாதன், யாழ்.மாவட்ட புனர்வாழ்வு திட்டமிடல் அதிகாரி பி.சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அடுத்த வருடத்திலிருந்து குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

இதேவேளை, நேற்றுமாலை அரசஅதிபர் தலைமையில் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்ட கலந்துரையாடலொன்றும் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி, சுகாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, கைத்தொழில், அரசதுறைகளில் அடுத்த வருடம் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி துறைசார்ந்த ஒவ்வொன்றுக்கும் பொறுப்பான அமைச்சர்கள் மூலமாக திட்டங்களை முன்னெடுத்து பூரணப்படுத்துவது என

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்படவுள்ளன!

(கொழும்பு)

சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்களின் நெருக்குதல் மற்றும் மின்சாரசபை நட்டத்தில் இயங்குதல் ஆகியவை காரணமாக மின்கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வீட்டுப் பாவனைக்கான மின் கட்டணம் ஒரு அலகுக்கு 4 ரூபா 50 சதமாகவும், தொழிற்சாலைகளுக்கான மின்கட்டணம் ஒரு அலகுக்கு 13 ரூபா ஆகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, அடுத்த வருடத்திலிருந்து மின்கட்டணங்களை அதிகரிப்பதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை மின்சாரசபையின தலைவர் மறுத்ததோடு அவ்வாறான திட்டம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

**எய்ட்ஸ் நோய் உள்ளது என உறுதிப்படுத்தப்பட்ட ஒருவர் பாலியல் உறவை, இரத்த தானம் செய்வதை தவிர்த்தல் வேண்டும்.**

# ரிமோட் எடுத்துவர படையினர் தடைசெய்தால் வர்த்தகர் சங்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள்

## பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலத்திரனியல் பொருட்களுடன் அவற்றுக்குரிய ரிமோட் கொன்றோல்களை எடுத்துவருவதைப் படையினர் தடுத்தால் - அதுபற்றிப் பொது மக்கள் தம்முடன் தொடர்புகொள்ள முடியுமென, யாழ்.வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று வர்த்தக சங்க மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

ரி.வி, டெக், வீடியோ சி.டி பிளேயர் போன்ற இலத்திரனியல் கருவிகளுடன் அவற்றுக்குரிய ரிமோட் கொனறோல்களை எடுத்துவரப் படையினர் இதுவரை காலமும் தடை விதித்திருந்தனர். இதனால் சோதனைச் சாவடியூடாக இவற்றை எடுத்துவரமுடியாதிருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றபின்பே இப்பொருட்களை எடுத்துவரக்கூடியதாக இருந்தது. இவ்விடயம் தொடர்பாக வர்த்தகர்கள் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டதையடுத்து, பொதுமக்கள் சொந்தப் பாவனைக்காக இலத்திரனியல் பொருட்களுக்குரிய ரிமோல் கொன்றோல்களை எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைப் படையினர் மீறும் பட்சத்தில் தம்மோடு தொடர்புகொண்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்தனர்.

# வெற்றிபெறும் நிலையில் பாகிஸ்தான் அணி உள்ளது



வெலிங்டனில் நடைபெறும் நியூஸிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெறுவதற்கு 45 ஓட்டங்களை எடுக்கவேண்டிய நிலையில் உள்ளது.

முன்னதாக இரண்டாவது இனிங்ஸில் ஆடிய நியூஸிலாந்து அணி- அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதில் றிச்சட்ஸன் 41, பிளெமிங் 24 ஆகிய இருவருமே கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர்களாவர். அடுதது ஆடத்தொடங்கிய பாகிஸ்தான் அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்டங்களை எடுத்துள்ளது. இன்னும் 45 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பாகிஸ்தான் அணி உள்ளது.

யாசிர் ஹமீட் 59 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்த நிலையில் யூசுப் யுகானா, இன்சமாம் உல்ஹக் ஆகிய இருவரும் முறையே 73, 57 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காது உள்ளனர். பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்களில் சொஹைப் அக்தார் மிகச் சிறப்பாகப் பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். முதல் இனிங்ஸிலும் இவர் 05 விக்கெட்டுக்களை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா!

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையை முன்னிட்டு மாணவர்களிடையே நடைபெற்ற மாதிரிப்பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவருக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். இந்த நிகழ்வில் பரிசுபெறத் தெரிவு செயப்பட்ட மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு, யாழ்.மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

# மருதங்கேணியில் இலவச மருத்துவமுகாம்!

(ஆழியவளை)

மருதங்கேணிப் பிரதேசத்தில் உள்ள ஆழியவளை தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் எதிர் வரும் 4 ஆம் திகதி பற்சிகிச்சை நிபுணர்களினால் பற்சிகிச்சை முகாம் நடாத்தப்படவுள்ளது.

எனவே நோயாளர்கள் உரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திப் பயன் பெறுமாறு திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (122)

## ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல் - 2004

இம் மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தித் திட்டஙகளுக்கான சிவில் கட்டுமான வேலைகளுக்கான தேவை அதிகரித்திருககின்ற காரணத்தினாலும் இவற்றை நிறைவேற்றுவதற்கு நிர்மாணம், பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தில (ICTAD - Institute of Construction Training and Development) பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுடைய தொகை, தரம் என்பன போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் ஒப்பந்தங்களை எடுப்பதற்கு முன்வருபவர்களது தொகை குறைவாக உள்ளது. இதனை நீக்கும் முகமாகவும், கூடியளவு இத்தொழில் முயற்சியாளர்களைக் கவர்ந்து ஊக்குவிக்கும் முகமாகவும் தகுதியுடைய கட்டிட ஒப்பந்த வேலைகளைச் செய்யவிரும்பும் முயற்சியாளர்களை இச்செயலகத்தில் பதிவுசெய்து அவர்களையும் இம்மாவட்டத்தில் செய்யப்படவிருக்கின்ற கட்டிட ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நடைமுறையை நிதிவழங்கும் நிறுவனங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இவர்களினால் செய்யப்படும் வேலையளவு, அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையில் காலக்கிரமத்தில் நிர்மாணம் பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தில் இவர்களைத் தகுதியான தரத்தில் பதியப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இம்மாவட்டத்தில் கட்டிட வேலைகளைச் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்கள் அவர்கள் ஏற்கனவே ICTAD நிறுவனத்தில் பதியப்பட்டிருப்பினும், பதியப்பட்டிருக்காதுவிடினும் அதனைக் கவனத்தில் கொள்ளாது இச்செயலகத்தில் தங்களைப் பதிவுசெய்துகொள்ளும்படி இத்தால் வேண்டப்படுகின்றார்கள். இதற்கான படிவம் செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.
29.12.2003.

(சி-1995)

### மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீட்டுப் பாவனைப்பொருட்கள்

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனம் பெறுமதி மிக்க வீட்டுப்பாவனைப் பொருட்களை வழங்கிவருகின்றது.

சுமார் 500 குடும்பங்களுக்கு இப் பொருட்கள் கடந்த வாரம் வழங்கப் பட்டுள்ளன.

சமையல் பாத்திரங்கள், உடு புடவைகள் என சுமார் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான இப்பொருட்கள் ஏற்கனவே வழங்கப்படாத குடும்பங்களுக்கென வழங்கப்பட்டு வருகின்றது. (122)

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

வடமராட்சிக் கோட்டத்தில், எயிட்ஸ் விழிப்புணர்வு வாரப் பணியில் ஈடுபட்டோருக்கு சேவைநலன் பாராட்டுப்பத்திரம் வழங்கும் வைபவம இன்றுகாலை 10.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேசசபை ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### கறுப்புப்பட்டிப் போராட்டம்

நாடு தழுவிய ரீதியில் நடைபெற்ற சுகாதாரசேவை ஊழியர்களின் கறுப்புப்பட்டிப் போராட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதாரசேவை ஊழியர்களும் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை கறுப்புப்பட்டி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், நண்பகலுடன் தமது போராட்டத்தை இடைநிறுத்திக் கொண்டனர். சம்பள முரண்பாடுகளை நீக்கக்கோரியே, நாடு தழுவிய ரீதியில் சுகாதாரசேவை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால், முன்னைய போராட்டங்களின்போது சுகாதாரசேவை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட போதும், நேற்றைய கறுப்புப்பட்டிப் போராட்டத்தின்போது நோயாளர்களின் நன்மைகருதி பணியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறு விளம்பரம்


### தபால் மூலம் சிங்களம்

இப்போது நீங்கள் சிங்கள மொழியை வீட்டில் இருந்தவாறு பேச/எழுத/வாசிக்க/படிக்கலாம். விபரங்களுக்கு எழுதவும் :-வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, இல.56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-1994)

திறைஞ்சனல் சங்கானை
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-1846)

ராஜா யாழ்ப்பாணம்.
சேரன், ரதி, மணிவண்ணன்
நடித்த
சொல்லமறந்த கதை
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-1847)


# அவுஸ்ரேலிய பந்துவீச்சில் இந்திய அணி சுருண்டது!



மெல்பேனில் இந்திய-அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில், அவுஸ்ரேலியா வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

நேற்று நடந்த இரண்டாவது இனிங்ஸின் நான்காவது நாள் போட்டியில் இந்திய அணி அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 286 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இந்நிலையில் ஏற்கனவே முதல் இனிங்ஸில் அவுஸ்ரேலியா அணியைவிட குறைவான ஓட்டங்களை எடுத்த நிலையில் இரண்டாவது இனிங்ஸிலும் குறைவான ஓட்டங்களை எடுத்துள்ளமையால் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

அவுஸ்ரேலிய அணி 95 ஓட்டங்களை எடுப்பதன் மூலம் இந்திய அணியை தோற்கடித்து வெற்றிவாய்ப்பைப் பெறும் நிலையில் உள்ளது.

இந்திய அணி சார்பில் ராவிட் 92, கங்குலி 73, டென்டுல்கர் 44 ஆகியோர் அதிக ஓட்டங்களை எடுத்துள்ளனர்.

அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்களில் வில்லியம் 4 விக்கெட்டுக்களையும் பிரட்லி, பிறாக்கன், மைக்கில் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.

# விடுதலைப்புலிகளின் ஆயப்பகுதி அடுத்தவருடம்முதல் கணினிமயம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த வருட முற்பகுதியில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயப்பகுதி - கணினிமயப்படுத்தப்படவிருக்கின்றது. இதற்கான நடவடிக்கையை ஆயப்பகுதியினர். மேற்கொண்டுவருகின்றனர்.

கணினிமயப்படுத்தப்படவிருக்கும் ஆயப்பகுதியின் புதிய படிவங்களை நிரப்புவது தொடர்பாக, வர்த்தகர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று வணிகர் கழகத்தில் இடமபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயப்பகுதிப் பொறுப்பாளர்கள், மற்றும் ஏனைய பிரமுகர்கள் வர்த்தகப்பிரமுகர்கள் உட்பட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சோதனைச்சாவடிகள் ஊடாக பயணம்செய்கின்றபோது ஏற்படுகின்ற தாமதங்களை நீக்குகின்ற வகையில் இந்த விளக்கங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயப்பகுதியினர் வர்த்தகர்களுக்கு வழங்கியுள்ளனர்.

## சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றோர்



சண்முகநாதன் இரத்தினவடிவேல் அகில இலங்கை சமாதான நீதிவானாக மல்லாகம் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும், இலங்கை மின்சார சபை அத்தியட்சகரும், மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபை செயலாளரும், கோட்டைக்காடு நூல்நிலைய அங்கத்தவரும் ஆவார். (72)



தென்புலோலியைச்சேர்ந்த நாடக சக்கரவர்த்தி பரஞ்சோதி பரராஜசிங்கம் (பப்பா) அண்மையில் நீதியமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தெய்வீக பேருரையாளரான இவர் - கலைக்குரிசில், நாடகசக்கரவர்த்தி என்னும் விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் லாலா சோப் விற்பனை முகாமையாளருமாவார். (17)



ஆத்தியடி, பருத்தித்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சண்முகநாதன் அகில இலங்கை சமாதான நீதிவானாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி க.பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சத்தியபிரமாண மொழிபெயர்ப்பாளரும், ஆத்தியடி பிள்ளையார் கோவில் முகாமையாளரும், வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தலைவரும், ஆத்தியடி சைவமன்ற முன்பள்ளி போசகரும், பருத்தித்துறை மத்திய மருந்தக நோயாளர் நலன்புரிச்சங்க செயலாளரும், பருத்தித்துறை ப.நோ.கூ சங்கததின் ஆத்தியடி கிளையின் நெறியாளர் குழு உறுப்பினரும், கெருடாவில் வடக்கு, தெற்கு கிராம சேவையாளருமாவார். (17)



காரைநகர் முதலாம்கட்டையடியைச் சேர்ந்த சபாபதி பத்மநாதன் நீதியமைச்சினால், அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மேலதிக மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் தியாகராஜா ம.ம.வித்தியாலயத்தின் பழைய மாணவரும் கிரிக்கெட் மத்தியஸ்தரும் இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபரும், காரைநகர் சைவமகா சபை உறுப்பினரும் ஆவார்.



விசுவநாதர் வேலுப்பிள்ளை சமாதான நீதிவானாக மேல் நீதிமன்ற நீதிபதி சி.வரதராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழையமாணவரும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியும், இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளரும், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய உறுப்பினரும் ஆவார்.



பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த சிவஸ்ரீ மகாகணபதி சிவானந்தராசா குருக்கள் சாவகச்சேரி நீதிபதி க.பாலசுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். (17)

# தமிழர்களுக்கு வழங்கப்படுவதுபோல முஸ்லிம்களுக்கு தனிமாகாணம் வேண்டும்

## வீடமைப்பு அமைச்சர் சேகுதாவூத் தெரிவிப்பு

(இராமநாதபுரம்)

இலங்கையில் - சமாதானத்திற்குப் பிறகு தமிழர்களுக்கு வழங்கப்படுவதைப்போல, முஸ்லிம்களுக்கும் தனி மாகாணம் வழங்கப்படவேண்டும் என வீடமைப்பு பிரதிஅமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

வீடமைப்பு அமைச்சரான பஷீர் சேகுதாவூத், இராமநாதபுரத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது தற்காலிகமாக அமைதி நிலவிவருகின்றது. அங்கு நிரந்தர அமைதி ஏற்படவேண்டும். நிரந்தர அமைதி எற்பட்ட பின்னர் இங்குள்ள அகதிகளை அழைத்துச் சென்றால்தான் நல்லது.

நிரந்தர அமைதி ஏற்பட்டால்தான், இலங்கை முழுவதற்குமான புனரமைப்பிற்காக நிதியுதவி கிடைக்கும்.

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் தமிழர்கள் எவ்வாறு பெரும்பான்மையாக வசிக்கின்றார்களோ, அதேபோல முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையாக வசிக்கின்றார்கள். தமிழர்களுக்கு அனைத்து அதிகாரங்களுடன் தனி மாநிலம் வழங்கப்படும்போது முஸ்லிம்களுக்கும் அதேபோல வழங்கப்படும். இலங்கையில் தற்போது அமைதி திரும்பவில்லை. அமைதிக்கான அடித்தளம் மட்டுமே போடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கொடுத்துள்ள அமைதித் திட்டத்தில் வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள இந்து, கிறிஸ்தவ தமிழர்களை மட்டுமே மையமாகக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளது. அதில், முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, முஸ்லிம் காங்கிரஸ் - முஸ்லிம்களுக்கான தனித் திட்டம் தயாரித்து வருகின்றது. முஸ்லிம்களுக்கு தனிமாகாணம் வேண்டும். தமிழர்களுக்கு எந்த அளவு அதிகாரங்களோடு வழங்கப்படுகின்றதோ, அதேயளவு முஸ்லிம்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

இலங்கையின் சமாதான காலத்திற்கு முன்பும், சமாதான காலத்திலும்கூட முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்டனர். 75 வீத மான முஸ்லிம்களின் இடங்கள் விடுதலைப் புலிகளால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான பிரச்சினை, அதிகாரப்போட்டியை மையப்படுத்தி நடக்கும் பிரச்சினை. இந்த அதிகாரப் போட்டி இலங்கை முழுவதையும் பாதிக்கின்றது.

தற்போதுள்ள நிலையில் பிரபாகரன் கேட்டாலும், கேட்காவிட்டாலும் தமிழீழத்தைக் கொடுக்கச் சிங்கள அரசியல்வாதிகள் தயாராகவுள்ளனர். அதற்குக் காரணம், அவர்களுக்குத் தேவை மத்திய ஆட்சிதான். மாநிலத்தில் என்ன நடக்கிறது என்பது பற்றிக் கவலையில்லை.

இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாகும். இந்திய மீனவர்கள் இலங்கைப் பகுதியில் மீன் பிடிக்கவும், இலங்கை மீனவர்கள் - இந்தியப் பகுதியில் மீன்பிடிக்கவும் ஒரு ஒப்பந்தம் செய்யப்படவேண்டும்.

ஆனால், இதில் இரு அரசுகளுக்கிடையிலும் சில அச்சங்கள் இருக்கின்றன. இரண்டு பகுதிகளில் இருந்தும் உளவாளிகள் ஊடுருவக்கூடும் என்ற அச்சமும் நிலவுகிறது.

இதனைத் தடுக்க இலங்கை, இந்திய அரசு, விடுதலைப் புலிகள் அடங்கிய முத்தரப்புப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச ஊழியர்கள் 60 வயதுவரை சேவையில்!

அரச சேவைகளில் புதிதாக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதைவிட, அரச சேவையில் இருக்கும் ஊழியர்கள் 60 வயதுவரை சேவையைத் தொடர அனுமதி வழங்கத் தீர்மானித்துள்ளது.

இவ்வாறான பதவிகளுக்குரிய விசேட நிபுணத்துவம் கொண்டவர்களுக்கு, இந்த வாய்ப்புக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கின்றனர். அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் 1996 ஆம் ஆண்டு அரச சுற்றுநிருபத்தின் கீழ் ஓய்வுபெற்றவர்களே இந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை அபிவிருத்திக்கு ஐரோப்பா நிதியுதவி

ஐரோப்பிய சங்கம் இலங்கைக்கு ஒரு மில்லியன் யூரோவை அன்பளிபபாக வழங்கியுள்ளது.

ஐரோப்பிய சங்கம் ஏற்கனவே 950 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இந்த நிதிக்கு மேலதிகமாகவே தற்போது ஐரோப்பிய சங்கம் மேற்குறித்த நிதியை வழங்கியுள்ளது.

இலங்கையின் அபிவிருத்தி நடைமுறைகளை விரிவுபடுத்துவதற்காகவே இந்த நிதி வழங்கப்படுவதாக ஐரோப்பிய யூனியன் தெரிவித்தது.

# சுகாதார ஊழியர்கள் நேற்றுமுதல் கறுப்புப்பட்டிப் போராட்டத்தில் குதிப்பு

சுகர்தார சேவை ஊழியர்கள் நேற்றுமுதல் கறுப்புப்பட்டிப் போராட்டம் ஒன்றில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

1997 ஆம் ஆண்டிலிருந்து நிலவிவரும் தமது சம்பள முரண்பாடுகளைக் களையவேண்டும் என்று கோரியே, இவர்கள் இந்தப் போரட்டத்தில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார சேவை ஊழியர்கள் அனைவரும் கறுப்புப்பட்டி அணிந்தவாறு, தமது கடமையில் ஈடுபட்டுள்ளனர். தமது சம்பள முரண்பாடு மற்றும் இதரபிரச்சினைகளைத் தனியே சுகாதார அமைச்சர் மட்டத்தில் ஆராய்வதன்மூலமாக தீர்வுகாண முடியாது எனத்தெரிவித்துள்ள இவர்கள் - நாளை கூடவுள்ள அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த விடயம் தொடர்பாக ஆராயப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சரவைக் கூட்டத்திலே சாதகமான முடிவுகள் எடுக்கப்படாவிட்டால், நாளை மாலை கூடவுள்ள சுகாதார சேவை ஊழியர்கள் சங்கம் - நாடு தழுவியரீதியிலேயே கறுப்புப்பட்டிப் போராட்டத்தை விஸ்தரிப்பதற்கு முடிவுகளை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இன்று தொடக்கம் நாட்டிலுள்ள அனைத்து வைத்திய சாலைகளிலும் கறுப்புக்கொடிகளை பறக்கவிடவுள்ளதாகவும் சுகாதார சேவை சங்கம் தெரிவித்துள்ளது.(01)

# பிரதமரைத் தவிர வேறுயாருடனும் பேச விடுதலைப் புலிகள் முன்வரமாட்டார்கள்

## அமைச்சர் அலிக் அலுவிகார கூறுகிறார்

(கொழும்பு)

புலிகள் - சமாதானம் சம்பந்தமான எந்தவித பேச்சுவார்த்தைகளையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன்தான் நடத்துவர். அவர் மீதே புலிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். சமாதான முயற்சிகளைதான் முன்னெடுக்கப் போவதாக ஜனாதிபதி கூறுவது வெறும் பகற்கனவு என உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இறத்தோட்டை பிரதேச சபையால் நடத்தப்பட்ட செயலாற்றுகைத்திறன் போட்டிகளில், வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன, மத, மொழி, வாழ்விடம் போன்ற பேதங்களை விட்டொழித்து, இந்நாட்டில் வாழும் அனைத்துப் பிரிவு மக்களும் ஒருவருக்கொருவர் உறவினர்கள் என்ற உணர்வு ஏற்பட்டாக வேண்டிய காலகட்டமொன்று தற்போது உதயமாகியுள்ளது. இதற்கு மாறாக மக்களைத் தூண்டி விடும் சக்திகளை மக்கள் உதாசீனப்படுத்த வேண்டும். வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றைச் செய்வதன் மூலம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை வீழ்ச்சியடையச் செய்துவிட வேண்டுமென சில சக்திகள் கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படுகின்றன. இந்நாட்டில் ஒருபோதும் இல்லாதவாறு நிர்வாக சேவை உத்தியோகத்தர்களும் இப்போது வேலை நிறுத்தம், வேலை பகிஷ்கரிப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடத்தலைப்பட்டுள்ளனர்.

பொலிஸாரினதும், நீதிமன்றத்தினதும் பொறுப்பில் விடப்பட்ட பிரச்சினையை முன்னிறுத்தி வேலை பகிஷ்கரிப்பு செய்துவருகின்றனர். எந்த வேலைநிறுத்தத்தையோ ஆர்ப்பாட்டத்தையோ கண்டு அரசாங்கம் கலங்கப்போவதில்லை.

மிக விரைவிலேயே வைத்திய சாலை ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கப்போவதாகத் தெரியவருகிறது. அப்படி ஒரு நிலை ஏற்படுமானால், அப்பாவி நோயாளர்களின் உயிர்களைக் காப்பாற்ற தொண்டு அடிப்படையில் சேவையாற்ற - இளைஞர்களும், யுவதிகளும் தயார்நிலையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு தொண்டுசெய்ய முன்வருவதன்மூலம், அரச எதிர்ப்பு சக்திகளை மழுங்கடிக்கும் பெரும் பணியை மேற்கொள்ளும் அத்தகைய இளைஞர், யுவதிகளுக்கு- அவர்களின் தகுதிக்கேற்ப நிரந்தர அரச தொழில் வழங்கப்படும். அதுவும் எதிர்வரும் ஜனவரி மாதத்திலேயே வழங்கப்படும் என உறுதியளித்தார்.

# தமிழ் மக்களின் ஏக பிரதிநிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே!

## தென்னிலங்கை ஊடகவியலாளர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை தாம் வலியுறுத்துவதாக, தென் தமிழீழ ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'இன்ரநஷனல் அலேட்' என்ற அமைப்பு- 'சமாதான முன்னெடுப்பும், சுமுகவாழ்வும்' எனும் தலைப்பில் மேற்கொண்ட கருத்துக்கணிப்பு ஒன்றின்போதே, தென் தமிழீழ ஊடகவியலாளர்கள் இதனை வலியுறுத்தினர்.

தடைப்பட்ட சமாதான முயற்சிகள் குறித்து - தமிழ், முஸ்லிம் மககளிடையே ஏற்பட்டுள்ள கருத்தியல் தாக்கங்களை கணிப்பீடு செய்யும் முகமாகவே, இந்த அமைப்பு கருத்துக் கணிப்பொன்றை நடத்தியது.

தென் தமிழீழத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் பலர் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

மட்டக்களப்பிலுள்ள கூட்டுறவு விடுதியில் நேற்றுக்காலை இந்தக் கருத்துக்கணிப்பு இடம்பெற்றது.

# மங்கள சமரவீரவுக்கு பிரிட்டன் விசா கிடைத்தது

முன்னாள் அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தருமான மங்களசமரவீரவுக்கு - பிரிட்டனுக்குச் செல்வதற்கான விசாவை அந்த நாட்டு உயர் ஸ்தானிகராலயம் வழங்கியது.

இது குறித்து மங்கள சமரவீரவின் பேச்சாளர் ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில் -

மங்கள சமரவீர நீண்ட நாட்களுக்கு முன்னரே பிரிட்டன் விசா கோரி விண்ணப்பித்திருந்தார். ஆனால், விசா வழங்கப்படாமல் பிரிட்டன் உயர் ஸ்தானிகராலயம் பின்னடித்து வந்தது.

இதையடுத்து இவர் கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர் ஸ்தானிகராலயத்தில் முறையிட்டிருந்தார். இதன் பின்னர் தூதரகத்தில் இடம்பெற்ற நேர்முகத்தேர்வுக்கு சமுகமளித்து, இரண்டு மணிநேரம் சாட்சியமளித்த பின்னரே இந்த விசா அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை, தமக்கு கொழும்பிலுள்ள பிரிட்டன் உயர்ஸ்தானிகராலயம், திட்டமிட்டே விசா வழங்கத் தாமதித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

முன்னதாக பிரிட்டனுக்குச்செல்ல விசா கோரி, விண்ணப்பிக்கும் இலங்கையர்களின் கைரேகைகளைப் பதிவுசெய்ய அந்நாட்டு அரசு எடுத்த தீர்மானத்திற்கு எதிராக, மங்கள சமரவீர உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சுப் பொறுப்பை நான் பெற்றமையால் கற்பனைப் பிரச்சினை உருவாக்குகிறார் ரணில்

## ஜனாதிபதி சந்திரிகா அறிக்கை

(கொழும்பு)

மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதைக் காரணமாகக் கொண்டு, கற்பனையிலான சட்டப் பிரச்சனை ஒன்றைப் பிரதமர் உருவாக்கி இருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சுக்களை பொறுப்பேற்பதற்கு எட்டுமாதங்கங்களுக்கு முன்னரே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுவிட்டன. ஆனால், சமாதானப் பேச்சுகள் தடைப்பட்டதற்கு என்னைக் குற்றஞ்சாட்டுகின்றனர். இது ஏற்கமுடியாதவிடயம்.

1994 ஆம் ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி பதவியேற்ற ஆரம்ப காலத்தில் - பாதுகாப்பு அமைச்சராகவும், ஜனாதிபதியாகவும் டி.பி.விஜயதுங்க பதவிவகித்த போது, நான் பிரதமராக இருந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

இவ்வாறான நிலையில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க முடியாது என, பிரதமர் தெரிவித்துள்ளமை நகைப்புக்குரியது.

நானும் எனது கட்சியும் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை வரவேற்கப்போவதில்லை. எனினும், பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிப்பது எனது பொறுப்பு.

எதிர்வரும் புத்தாண்டில் பல தேர்தல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது. அவற்றை எதிர்கொள்வதற்கு நாம் தாயாராகவுள்ளோம். அதேவேளை, என்னால்தான் சமாதான முயற்சிகள் தடைப்பட்டன என்று கூறுவது பொருத்தமற்றது என்றும் ஜனாதிபதி அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கைதிகள் தப்பியோடியதனால் 3 பொலிஸார் இடைநிறுத்தம்

சோமதேரரின் இறுதிநிகழ்வின் போது, வன்முறையில் ஈடுபட்ட இரு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தவேளை, அவர்களை தப்பவிட்டதற்காக மூன்று பொலிஸாரை அவர்களது பணிநிலைகளிலிருந்து பொலிஸ்மா அதிபர் இடைநிறுத்தியுள்ளார்.

சோமதேரரின் இறுதிநிகழ்வின் போது ஏற்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்பில், இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளனர். இந்த மூன்று பொலிஸாரும் கவனயீனமாக இருந்தபொழுது - பிடிபட்ட இரு சந்தேகநபர்களும் சிறையிலிருந்து தப்பினர்.

இதனாலேயே இம்மூன்று பொலிஸாரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

இதேவேளை, தப்பிச்சென்ற இரு சந்தேக நபர்களும் வேறொரு விசேட பொலிஸ் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் பதிவுக்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது

வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கான பதிவுக்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் இருபது ரூபாவாக இருந்த பதிவுக்கட்டணம் - தற்பொழுது ஐம்பது ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கைகள், அனைத்துப்பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், வாகனங்களை உடமை மாற்றம் செய்தல், பழைய சாரதி அனுமதிப்பத்திரங்களை ஒப்படைத்து, புதிய கணினி சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் ஆகிய வேலைகளைப் பொதுமக்கள் தத்தமது பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்களில் பலர் இது தொடர பாக அறியாத காரணத்தினால், யாழ. மாவட்ட செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு செல்வதால் - வீண்சிரமங்களையும், நேர இழப்பையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. எனவே, தத்தமது பிரதேச செயலகங்களை இந்த வேலைகளுக்காகத் தொடர்பு கொள்ளும்போது, இலகுவாக இருக்கும் என யாழ். செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ச)



அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற முறைசாராக் கல்விப் பிரிவினரின் - கைவினைப் பொருட்களின் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.பஞ்சலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர், கல்விப் பிரிவு ஆசிரியர், மாணவிகளைப் படத்தில் காணலாம்.

## வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 4420 ஆசிரிய வெற்றிடங்கள்

### கல்வி அமைச்சு தெரிவிப்பு

(ஆழியவளை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 4420 ஆசிரியர் வெற்றிடங்கள் தற்போது காணப்படுவதாக மாகாணக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

4221 தமிழ்மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களும், 158 சிங்களமொழி மூல வெற்றிடங்களும் உள்ளன.

மேலும் மாகாணசபையின் கீழ் உள்ள பாடசாலைகளில் 4020 வெற்றிடங்களும், தேசிய பாடசாலைகளில் 195 ஆசிரியர் வெற்றிடங்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

## தரம் 1 மாணவர்களுக்கு சீருடை

(ஆழியவளை)

2004 ஆம் ஆண்டு தரம் 1 இல் சேரும் மாணவர்களுக்குச் சீருடை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் - பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

தரம் I இல் சேரும் மாணவர்களின் விண்ணப்பங்களை, பெற்றோர்கள்மூலம் கிராம அலுவலர்களிடம் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்பு ஒப்படைக்குமாறும், இந்த நடவடிக்கையை துரிதமாகச் செய்யுமாறு பாடசாலை அதிபர்களை அவர் கேட்டுள்ளார். (122)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீட்டுப்பாவனைப் பொருட்கள்

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நான்கு கிராம சேவகர் பிரிவில், மீளக்குடியமர்ந்தவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். வீட்டுப் பாவனைப் பொருட்களை நேற்றைய தினம் வழங்கியது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மருதங்கேணி, வத்திராயன், செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு ஆகிய கிராமசேவகர் பிரிவுகளுக்கு வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டன. இவற்றில் குடம், வாளி, பிளாஸ்ரிக் பேசின், நுளம்பு வலைகள் என்பன அடங்கும்.

இந்தப் பொருட்கள் முதற்கட்டமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டன. அதன்பிறகு மீளக்குடியமர்ந்த மக்களுக்கு கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (17)

## சின்னஞ்சிறு செய்திகள்

### சேவைநலன் பாராட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் கோட்ட அரசியல் பிரிவின் எய்ட்ஸ் தடுப்புப் பரப்புரைப்பணியில் ஈடுபட்டு, நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்டது.

குழுரீதியான சந்திப்பின்போது, சேவை உறுதிப்பாட்டுக் கடிதம் வழங்கப்பட்ட சகலரையும், இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடுமாறு யாழ். நல்லூர் கோட்ட அரசியற்துறையினர் கேட்டுள்ளனர்.

### எய்ட்ஸ் நோய்க் கருத்தரங்கு

(ஆழியவளை)

வடமராட்சி கோட்டத்தில் எயட்ஸ் நோய் எதிர்ப்பு விழிப்புணர்வு சம்பந்தமான இறுதிநாள் கருத்தரங்கு - கடந்த சனிக்கிழமை கரவெட்டி பிரதேசசபை ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

வடமராட்சி வலயக் கல்விக் கழகப் பொறுப்பாளர் சி.தாயகன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில், பருத்தித்துறை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை சிறப்புரை ஆற்றினார்.

இந்தக் கருத்தரங்கில் பாடசாலை அதிபர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (122)

### பசுமாடு வெட்டியவர் கைது

(யாழ்ப்பாணம்)

பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டியவரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்றது.

இ.ராசிக் என்ற நபரே, அனுமதி இன்றி பசு மாட்டை வெட்டியுள்ளார். இந்தத் தகவல் யாழ்.பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்தவுடன், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் - அனுமதி பெறாது மாட்டை வெட்டியவரையும், மாட்டு இறைச்சியையும் கைப்பற்றி பொலிஸ்நிலைத்திற்குக் கொண்டு சென்றனர்.

பின்னர் அந்த நபரிடம் விசாரித்தபோதே, அனுமதி பெறாது பசு மாட்டை இறைச்சிக்கு வெட்டியது தெரியவந்தது. இந்த நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்த வுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர் (தீ)

### வட-கிழக்கில் 154 அதிபர் வெற்றிடம்

(ஆழியவளை)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில், இலங்கை அதிபர் சேவைத் தரத்தைச் சேர்ந்த 154 வெற்றிடங்கள் உள்ளதாக வடக்கு-கிழக்க மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ் மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்த மாகாணத்திற்கென 154 தமிழ்மொழிமூல அதிபர்கள் தேவையாக இருந்தபோதும், தற்போது 1392 பேரே சேவையிலுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

அதிகமான பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களே பாடசாலைகளின் பொறுப்புக்களைக் கவனித்து வருகின்றனர். (122)

### தையல் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ். பகவான் சத்தியசாயி சேவா நிலையம் - வருடந்தோறும் நடத்தும் மகளிருக்கான இலவச தையல் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதில் ஆர்வம் உள்ளவர்கள் இணைந்து பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களை - இலவச தையல் பயிற்சி, பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம், ராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவை நிலையத்தினர் கோரியுள்ளனர். (111)

### பத்திரிகையாளர் சங்கம் முறைப்பாடு

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்திற்கு எதிராக அண்மையில் பிராந்திய பத்திரிகையொன்று வெளியிட்ட செய்திக் கட்டுரைக்கு எதிராக, வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தால், பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் சங்கம் ஒன்று ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளமை இதுவே முதன் முறையாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (111)

## எய்ட்ஸ் விழிப்புணர்வு வடமராட்சியில் தீவிரம்

எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கின் நான்காம் நாள் நிகழ்வுகள் - கடந்த புதன் கிழமை வடமராட்சி - கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகள்ரீதியாக நடைபெற்றன.

இந்த நிகழ்வில் - வடமராட்சி கோட்ட பாடசாலை ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள், கரவெட்டி பிரதேசசபை உத்தியோகத்தர்கள், கரவெட்டி தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து 12 குழுக்களாகப் பிரிந்து வல்வெட்டி, மத்தொனி, அல்வாய் கிழக்கு, கரணவாய் மத்தி, கரணவாய் தெற்கு, கரவெட்டி கிழக்கு, துன்னாலை மத்தி, துன்னாலை தெற்கு, துன்னாலை, கட்டைவேலி, துன்னாலை கிழக்கு ஆகிய கிராம அலுவலக பிரிவுகளுக்குச் சென்று 1008 குடும்பங்களுடன் கலந்துரையாடி துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

இவர்களுடன் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், ஒலிபெருக்கிமூலமும், சுவரொட்டிகள் ஒட்டுவதன்மூலமும் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

### தென்னங்கன்றுகள் நாட்டுவதற்குத் தீர்மானம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் அழிச்கப்பட்ட தென்னை மரங்களை மீள உருவாக்கவென தென்னங்கன்றுகள் நாட்டுவதற்கு, அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கு வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உறுதியளித்துள்ளது. (17)

## ஆற்றலை மேம்படுத்தும் பயிற்சிப் பட்டறை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள கிராம மட்டத்திலான அமைப்புக்களின் தலைவர், செயலாளர்களுக்கு ஆற்றலை மேம்படுத்தும் பயிற்சிப் பட்டறை யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் உதவியுடன் மூன்று நாட்களுக்கு நடைபெற்று வருகின்றது.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டபத்தில், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நேற்று ஆரம்பித்து, இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

மூன்று நாள் பயிற்சிப் பட்டறையில் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், விவசாயம் கால்நடை அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் - கிராம மட்ட தலைவர்களில் சமூக பொறுப்புக்கள், பங்களிப்புகள், சுற்றாடல் பாதுகாப்பில் கிராமமட்ட தலைவர்களின் பங்களிப்பு, நிதி நடைமுறைகள் போன்ற விடயங்களில் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன. (17)

## ஈரானில் உயிரிழந்த மக்களுக்கு யாழ்ப்பாணத்திலும் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஈரானில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பூமியதிர்ச்சியில் உயிரிழந்த 40 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்களுக்கு நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருமறைக் கலாமன்றத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் - நேற்றுமுன்தினம் மாலை மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆரம்பமாகின.

இதன்போது, அனைவரும் சில நிமிடநேரம் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

புதியதொரு ஆண்டை கொண்டாடி மகிழ்வுடன் வரவேற்கும் இந்த வேளையில், இப்படியானதொரு செய்தி - அனைவரையும் துன்பத்திற்குள்ளாக்கி உள்ளதென நிகழ்வுக்குத் தலைமை வகித்த மன்ற பிரதி இயக்குநர் சாம் பிரதீபன் - தனதுரையில் தெரிவித்தார். (111)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்



பெயர் : ப.தணிகா
முகவரி : இராஜஸ்தலம், அல்வாய் தெற்கு.


ஒன்பதாவது அகவையில்



பெயர் : ஆ.நிசாந்தினி
முகவரி : 36/12, செட்டித்தெரு, நல்லூர்.

# பல்வகைப் பயன்தரும் விதை

அமேசன், பிரேசில், பொலிவியா, பெரு ஆகிய நாடுகளில் பரவலாக வளரும் பிரேசில் நட் (**Brazil nut**) எனப்படும் ஒரு வகையான பழத்தின் விதை - கிறிஸ்மஸ் காலத்தில் இங்கிலாந்தில் பரவலாகப் பாவிக்கப்படும். கடலை (**Nut**) என்ற பெயரில் அழைக்கப்பட்டாலும், இவை ஒரு பழத்தின் வித்தாகும் (**Seeds**). தற்போது இம்மரம் அருகிவருகின்றது. இது ஒரு காட்டுச்செடியாகும். செயற்கையில் வளர்ப்பது நடைமுறைச் சாத்தியம் அற்றதாகவும் கருதப்படுகிறது. இந்தச் செடி தனது இன விருத்தியைக் குறைத்துக்கொண்டு செல்வதாகவும் அறிந்துள்ளார்கள். இந்த மரத்தின் விதையை உண்ணும் அகூற்றி (**Agouti**) எனப்படும் ஒருவகை எலி இனத்தைக் கட்டுப்படுத்துவது அவசியமாகக் கருதப்படுகின்றது. காடுகளில் சேகரிக்கப்பட்டு அதிகளவில் பாவிக்கப்படும் ஒரேயொரு விதை இதுவாகும். இந்த மரம் 150 அடிக்கு மேல் உயரமாக வளரக்கூடியது




தற்போது சேகரிக்கபபடும் விதைகள் எல்லாம், நீண்ட காலத்துக்கு முன் உருவான மரங்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். புதிய மரங்கள் உருவாகுவது அருகிக்கொண்டே செல் கின்றது. இதனால் இந்த விதையை உணவாகக் உட்கொள்ளும் தாவரபட்சணிகளை (**Herbivores**) கட்டுப்படுத்தல் அவசியமென தெரிவிக்கிறார்கள். குறிப்பாக "அகூற்றி" இன எலிகள் இவ்வகை மரத்தின் புதிய கன்றுகள் (**Saplings**) உருவாவதை தடைசெய்கின்றன. இந்த மரத்தின் பழங்கள் வன்மையான ஒட்டை (**Hard Shell**) கொணடுள்ளது.

இதனால், மரத்தில் இருந்து விழுந்த பழங்கள் நீண்ட நாட்கள் மரத்தின் அடியில் கிடந்து, பங்கசு ரேனமற் ஆகிய நுண்ணங்கிகளின் தாக்கத்தின் பின்பே விதைகள் வெளியே வருகின்றன.

ஆனால், அகூற்றி எலிகள் தமது பற்களினால் நன்னுவதன்மூலம் (**Gnawing**) மூலம், பழத்தைச் சாப்பிட்ட பின் விதையைக் பின்னர் பாவிப்பதற்கு மறைத்து வைத்துக்கொள்கின்றன.

சிலவேளைகளில் உண்பதற்கு மறந்தும் விடுகின்றன. இதனால், சில விதைகள் மாத்திரமே மரமாகும் வாய்ப்பைப் பெறுகின்றன.

# காசநோய்க்கு மருந்து




காசநோய்க்கிருமியின் மரபணுவில் மாற்றங்களை உருவாக்கி, அந்த நோயின் பாதிப்பைக் குறைப்பதற்கு விஞ்ஞானிகள் முற்பட்டவேளை, மிகவும் தீவிரமான (**VIRULENT**) தாக்குதிறன் கொண்ட காசநோய் கிருமியை உருவாக்கவேண்டியநிலை ஏற்பட்டது.

உலகம் முழுவதும் அதிக பாதிப்பை காசநோய் உருவாக்கியுள்ளது. புதிய வகையான கிருமியின் தாக்கு திறனை அறிவதற்காக, எலிகளின் உடலில் அவற்றைச் செலுத்தியிருந்தனர். அதேநேரத்தில், வழமையான காசநோய்க் கிருமிகளையும் சில எலிகளின் உடலில் செலுத்தியிருந்தனர். புதியவகையான கிருமிகள் மிக விரைவில் மரணமடையச் செய்திருந்தன.

தாம் தவறாக மரபணுவில் மாற்றம் செய்துள்ளதாகக் கருதி பரிசோதனைகளைப் பலமுறை செய்திருந்தனர். ஆனால், ஒரே விளைவையே மீண்டும் மீண்டும் பெற்றிருந்தனர். மேலும் உயிரியல் பயங்கரவாதத்திற்கு (**BIO TERRORISM**) தமது புதிய கண்டுபிடிப்பு வழிவகுத்து விடலாம் எனவும் அச்சம் கொள்ள ஆரம்பித்தனர். ஆனால், மனிதனுக்கு அதிகபாதிப்பை ஏற்படுத்தாது என்பதையும் கண்டுகொண்டனர்.

# பலூன் பயணம்



**1999** ஆம் ஆண்டு பிறியன் ஜோன், பெற்றான்ட் பிக்காட் ஆகிய இருவரும் பலூனில் உலகைச் சுற்றி வந்திருந்தார்கள். சூரியசக்தியில் (**Solar Powered**) இயங்கும் விமானத்தின்மூலம் மண்டும் உலகைச்சுற்றி வருவதற்குத் திட்டமிட்டுள்ளார்கள்.

மேலும் இரவில் தமது பயணத்தைத் தொடர்வதற்கு மின் கலங்களை (**Batteries**) பாவிப்பதற்கும் இவர்கள் திட்டமிட்டுள்ளாாகள்.

இவர்கள் 2006 ஆம் ஆண்டு தமது பயணத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளனர். கிளைடர் (**Glider**) எனப்படும் இயந்திரம் இல்லாத பயணம் செய்யும் விமானங்களுக்கு அமைக்கப்பட்டுள்ளது போன்ற நீளமான செட்டைகளையும், சூரிய ஒளியை மின்னாக மாற்றும் கலங்களும் (**Photo cells**) செட்டையின் மேற்புறத்தில் அமைக்கப்பட்டுளளது. இந்த விமானம் எரிபொருள் (**Fossi Le Fuel**) எதையும் எடுத்துச் செல்லாது. இதனால், சூழல் மாசும் (**Enviromental Pollution**) தவிர்க்கப்படுகின்றது.

# காலநிலை மாற்றம்

அண்மையில் இரு அமெரிக்க விஞ்ஞானிகள் வளிமண்டலத்தில் காணப்படும் கரித்துகள்கள் (**SOOTS**) காலநிலையில் மாற்றங்களை உருவாக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

சூழல்வெப்ப அதிகரிப்பிற்கு (**GLOBAL WARMING**) வளிமண்டலத்தில் காணப்படும் கரித்துகள்களும் காரணமாக அமைவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது வளிமண்டல வெப்ப உயர்விற்குக் காபனீரொட்




சைட் காரணமாக அமைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கரித்துகள் என்பன மரம், எரிபொருட்கள் முற்றாக தகனமடையாதநிலையில் (**INCOMPLETE COMBUSTION**), வளியில் புகையுடன் பரவும் துகள்கள் ஆகும்.

மேலும் கரித்துகள் மென்மையான பனிக்கட்டியைக் கருமை நிறமுடையனவாக மாற்றுவதாகவும், இதனால் சூரிய ஒளி பனிக்கட்டியில் தெறிப்படைவதற்குப் பதிலாக, உறிஞ்சப்படுவதால் (**ABSORBED**), நிலமட்டத்தில் வெப்பநிலை அதிகரிப்பிற்கு வழி வகுப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

பனிப்பாறைகள் முன்னரிலும் பார்க்கக் கூடுதலாக உருக முற்படுவதற்குச் நிலமட்டத்தில் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக அமைவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# வாரம் ஒரு யோகாசனம்

## நௌலி



முதல் நிலையாக நின்றுகொண்டு, வாயின்மூலம் மூச்சை வெளித்தள்ளி, வயிற்றைக் காலி செய்யவேண்டும். பின்பு முழங்கால்களின் மேல் கைகளை ஊன்றி, உடலை முன்பக்கமாக வளைத்துக்கொள்ளவேண்டும். அப்போது குடல் ஒரு தூணைப்போல் உருண்டு தோன்றும். இது மத்திய நௌலி. 5 நிமிடம் செய்யவேண்டும். மத்திய நௌலி பழகித் தேர்ச்சி பெற்ற பிறகு, இரண்டாவது நிலையாக - வயிற்றின் வலது பக்கத்திற்குக் குடலைகொண்டுபோய் அசைக்கவேண்டும். இது தட்ச நௌலி.

மூன்றாவது நிலையாக - இடது பக்கம் குடலைக் கொண்டுபோய் அசைக்கவேண்டும். இது வாம நௌலி எனப்படும். தேர்ச்சி பெற்றவர்கள் 8 நிமிடம் செய்தால்போதும். இந்த முறையால் குடலில் தங்கியுள்ள கழிவுகள் அகற்றப்படும், மலம் இளக்கமாகும், உள் இருக்கும் கழிவுகள் அனைத்தும் அகற்றப்படும்.

**குறிப்பு:** -

வயிற்றில் அறுவை சிகிச்சை செய்தவர்கள், கேணியா உள்ளவர்கள், வயிற்றுப்புண் உள்ளவர்கள், இதய நோயாளிகள், பலவீனம் உள்ளவர்கள், இரத்த அழுத்தம் உள்ளவர்கள், கர்ப்பம் தரித்த பெண்கள், 18 வயதிற்கு கீழ்பட்ட ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் எக்காரணம் கொண்டும் இந்தப் பயிற்சி செய்யக்கூடாது. உறுப்புகளில் பல அங்கக் குறைபாடுகள் ஏற்படும். உயிராபத்தையும் ஏற்படுத்திவிடும். பத்மாசனம், வச்சிராசனம், நாடிசுத்தி, பிராணயமம் செய்து பலன் அடையலாம்.

18 வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள் ஒட்டியாணா, சிரசாசனம் செய்யக்கூடாது. பாதகஸ்தசாசனம் செய்தால்போதும். சிரசாசனத்தின் பலன் உண்டு. கர்ப்பம் தரித்த பெண்கள் பத்மாசனம் மட்டும் 7 மாதம்வரை செய்யலாம். வச்சிராசனம் 2 மாதம் செய்யலாம். ஏனைய ஆசனங்களைச் செய்யவேண்டாம்.

ஆசனம் செய்து தேர்ச்சி செய்து பழகாதவர்கள் - கர்ப்பம் தரித்திருக்கும்போது ஆசின முயற்சி செய்யவேண்டாம். மிரவாசனத்தின் பின் 5 மாதம் கழிந்ததும், ஆசனம் செய்யலாம்.

மாதவிடாய்க் காலங்களில் இந்த ஆசனம் செய்யவேண்டாம். மாதவிடாய் கழிந்து 3 நாட்களுக்குப் பின் செய்யலாம்.


### நன்மைகள்

இதன்பலன் மிக உன்னதமானது. வயிற்றைச் சார்ந்த முதுகெலும்பு பாகம், அதைச் சார்ந்த தசைகள், நரம்புக்கூட்டங்கள் முதலியன புத்துயிர் அடைகின்றன. இந்திரியப்பையும், தாதுவும் வலுவடைகின்றன. இவை நமது இச்சைச் சக்திக்கு அடங்கிநடக்கும்.

வலுவடையும் வாலிபம் ஸ்திரப்படும். வியாதிகள் என்னும் பிடியில் இருந்தே விடுதலை ஏற்படும். சோம்பல் ஓடிவிடும். அஜீரணம், தலைநோய், நரம்புகள் பலவீனம், இரத்தச்சோகை, மூலவியாதி, வாய்த்துர்நாற்றம், வாய்வு, குடல் வாய்வு, காசநோய், ஆஸ்த்துமா, மலச்சிக்கல், கண், காது, மூக்கு, உடல் சம்மந்தமான அனைத்து நோய்களுக்கும் அரும் பழங்கால மருந்து. முகம் சுடர்கொண்டு ஒளிவீசும். மற்றவர்களை வசிகரம் செய்யும் சக்தி கொண்டது. இறைசக்தி உண்டாகும்.

*தருபவர் - மா.மகாநேசன்.*

# கடல் உயிரினங்களை பாதுகாப்போம்




சில கடல் உயிரினங்கள் விரைவாக அழிந்துகொண்டு செல்வதைத் தடுப்பதற்கு, ஐரோப்பிய ஒன்றியம் புதிய நடைமுறையொன்றை அறிமுகப்படுத்த உள்ளது. இதன்மூலம் கோட் (COD), ஹேக் (HAKE) ஆகிய அழிந்துவரும் மீன் இனங்களைக் காப்பாற்றுவதற்கு - கடலில் மீன் பிடிக்கப்படும் நாட்களைக் குறைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கும் முயன்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் 15 நாடுகள் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை ஏற்றுள்ளன.

ஆனால், ஸ்பெயின், டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்தத் திட்டத்திற்கு அதிக அளவில் ஒத்துழைப்பு கொடுப்பதற்கு மறுத்துள்ளன.

# புதிய கலங்கள்

கலிபோர்னியாவில் உள்ள ஆராய்ச்சி நிலையமொன்று - முதிர்ச்சி அடைந்த கலங்கள் (CELLS) மீண்டும் அவற்றை ஆரம்பநிலையான IMMATURE CELL ஆக மாற்றத்துக்கான வழிமுறைகளைக் கண்டுபிடித்துள்ளது.

இதன்மூலம், புதிய கலங்களை வைத்திய தேவைகளுக்கு பயன்படுத்தமுடியும் எனக் கருதுகின்றார்கள். பாரிசவாதம் (PARALYSIS), பார்க்கின்சன் (PARKINSON'S) நோய் ஆகியவற்றை மாற்றுவதற்கு வழிபிறக்கலாம் எனக் கருதுகிறார்கள்.




சில நோய்கள் உடற்கலங்கள் அழிந்து போவதால், தோன்றுகின்றன. இதனால், அழியும்நிலையிலுள்ள கலங்கள் முதிரச்சியடையாத நிலைக்கு மாறறுவதன்மூலம், நீரிழிவு நோய்க்குக் காரணமான இன்சுலின் உறபத்தி செய்யும் கலங்களையும், மூளைக் கலங்களின் முதிர்ச்சியால் ஏற்படும் பார்க்கின்சன் நோய்க்குப் புதிய கலங்களையும் உருவாக்கமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மனித உடலின் பழைய கலங்களைப் புதுப்பித்துக்கொள்ளும்நிலை ஈரலில் காணப்படுகின்றது. மேலும் சில ஈரூடகவாழ்வுள்ள இனங்கள் (AMPHIBIANS) - முதுமையான கலங்களில் காயம் ஏற்படும்போது, இளமையான கலங்களாக (IMMATURE CELL) மாற்றும் இயல்பைக் கொண்டுள்ளன.

# உள்ளூர் சேவை விமானங்கள்

வீதியைப்போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் அளவுக்கு அதிகமான மோட்டார் வாகனங்களின் அளவைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு பிரேரணை கூடுதலாக உள்ளூர் விமான சேவைகளைப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது.



இதன்மூலம், வாகனங்களினால் வெளிவிடப்படுகின்ற காபன்கொண்ட வாயுக்கள் சூழலை மாசுபடுத்துவதிலிருந்து, ஓரளவுக்குப் பாதுகாக்க முடியும் என்று நம்பப்படுகின்றது.

இதனால், பிரித்தானிய நகரங்களில் வாகன நெருக்கடி ஓரளவு குறையும் என்ற நல்ல செய்தியும், உள்ளூர் விமான சேவைகளின் அதிகரிப்பும், மக்கள் மத்தியில் இன்ப அதிர்ச்சியாக இருந்தாலும், விமானங்களில் அளவுக்கு அதிகமான உள்ளூர் பறப்பு வளிமண்டலத்தை மாசுபடுத்தும், விபத்துகளை ஏற்படுத்தும் என்பதும் ஓரளவுக்கு அச்சம்தான்.

ஆனால், உள்ளூர் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற விமானங்கள் - சூழலை மாசுபடுத்தாதளவுக்குச் சிறிய இயந்திரங்களையும், தரமான எரிபொருட்களையும் (High Class Super Petrol) கொண்டதாக இருக்கவேண்டுமென, அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், இதற்கு ஏற்படுகின்ற செலவு, பயணிகள் மத்தியில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இனி - வீட்டுக்கு வீடு விமானசேவைதான்.

# திரை விமர்சனம்

## சிந்தாமல் சிதறாமல்

ஓவியக்கல்லூரியில் சேர்ந்து மிகப் பெரிய ஓவியன் ஆகவேண்டும் என்ற இலட்சியம் உள்ளவர் அப்பாஸ். அவருக்கு ஒரு காதலி நந்திதா. அப்பாஸின் இலட்சியத்துக்கு அவரது தந்தையே குறுக்கேநிற்கிறார். இதனால், அப்பாவுடன் சண்டை பிடித்துக்கொண்டு சென்னைக்குச் சென்று ஓவியக்கல்லூரியில் சேருகின்நார்.



அங்கே உடன்படிக்கும் சோனா - இவரைக் காதலிக்கின்றார். ஆனால், அப்பாஸின் தந்தை - நந்திதாவை இவருக்குத் திருமணம் முடித்து வைக்கச் சம்மதிக்கிறார். அதற்கு விலையாக தனது மளிகைக் கடையைப் பார்த்துக் கொள்ளச் சொல்கிறார். என்ன அப்பா இவர்! அப்பாஸ் காதலியைக் கைப்பிடித்தாரா? இதுதான் சிந்தாமல் சிதறாமல் படமாக்கப்பட்டிருக்கிறது. நந்திதா - அப்பாஸ் காதலை ரசிக்க ரசிக்கப் படமாக்கியிருக்கின்றார் இயக்குநர் சண்முகவேல். சோனா படத்துக்கு ஏற்பட்ட சேலைனால் அப்பாஸ் உடம்பு கூடிவிட்டது. ஒட்டு மீசை அவர்களுக்குத் தேவைதானா? பலவருடங்கள் ஓய்வெடுத்து விட்டு, திடீரென ஹீரோவேடம் கொடுத்ததில், நன்கு நடிக்க மறந்துவிட்டாரோ அப்பாஸ்.


அப்பாஸின் நண்பராக வந்திருக்கிறார் கருணாஸ். தேவையற்ற சண்டைக்காட்சிகள். இசை - பரணி எடுபடவில்லை.

சிந்தாமல் சிதறாமல் வெற்றிபெற வேண்டும் என்று நினைத்தவர்களுக்குத்தோல்விதான்.

**- PNS -**

# மலேரியாத் தடுப்பு

மரபணுக்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளவர் (MUTATED GENE) - மலேரியா நோய்க்கு மிகுந்த எதிர்ப்பு சக்தி கொண்டவர்களாகக் காணப்படுவதாக எடின்பரோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதனால், மாற்றம் ஏற்பட்டுள்ள மரபணுக்களைக் கொண்டவர்களின்மூலம், மலேரியாவிற்கான எதிர்ப்பு சக்திகொண்ட மருந்துகளை (VACINE) தயாரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்கள். ஒருவர் மலேரியா நோயினால் தாக்கப்படும்போது, செங்குருதிக் கலங்கள் (RED BLOOD CELLS) ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதன் (STCKING) மூலம், இரத்தக் குழாயில் அடைப்பை ஏற்படுத்தி உறுப்புக்களை (ORGANS) செயல் இழக்கச் செய்வதையும் அவதானித்தார்கள்.



பபுபா நியூகினியாவில் - மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக் கையில் 80% மக்கள் மலேரியாவிற்கு எதிரான மாறுதல் அடைந்த மரபணுவைக் கொண்டிருந்ததை அவதானித்தார்கள்.

வழமையாக மலேரியாவால் பாதிக்கப்படுபவர்களின் செங்குருதிக் கலங்களில் ஒட்டக்கூடிய புரதப்பொருள் ஒன்று உருவாவதையும், இவற்றை மலேரியா ஒட்டுண்ணிகளே (PARASITE) உருவாக்குவதாக அறிந்துகொண்டனர்.

கூர்ப்பு எனப்படும் சூழலுக்கு ஏற்ப மாற்றத்தை ஏற்படுத்தும் வலிமை மிக்கவர்கவர்களே வாழ்வார்கள் (SURVIVAL OF THE FITER) என்ற டார்வினின் கருத்தை மரபணு மாற்றம் தெளிவுபடுத்துகின்றது.

# நெடிய பயணம்

150 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வுலகிலிருந்து முற்றாக அழிந்துள்ளதாகக் கருதப்பட்டிருந்த கடல் பறவை ஒன்றை ஒரு பத்திரிகையாளரும், படப்பிடிப்பாளரும் தற்செயலாகக் கண்டுபிடித்துள்ளார்கள்.



இந்தப் பறவை - நியூசிலாந்தில் காணப்பட்ட ஸ்ரோம் பெட்றெல் (Storm Petrel) என இனம் காணப்பட்டிருந்தது.

இந்தப் பறவையை 1850 ஆம் ஆண்டிற்குப்பின் காணமுடியாதிருந்ததாகவும் தெரிவித்தனர்.

பறவைகள் தொடர்பான (Ornithology) ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதுவதற்காக நியூசிலாந்திலுள்ள சிறிய தீவொன்றில் வள்ளம் ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த நேரத்தில், 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட இந்த இனப் பறவைகளைக் காணநேர்ந்ததெனத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பறவைகளின் உடலின் அடிப்பாகம் வெள்ளை நிறமாகவும், கறுப்பு நிறமான கோடுகளும் காணப்பட்டதெனவும், 19 ஆம் நூற்றாண்டில் இந்தப் பறவைகள் மறைந்த நேரத்தில், பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சில எச்சங்களுடன் (Fossiles) தற்போது காணப்பட்ட பறவையின் மரபணுவுடன் ஒப்பிட்டுப் பார்க்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பறவை ஆரம்பத்தில் காணப்பட்ட பிரதேசத்தில் எலிகளின் எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளதால், இந்தப் பறவைகள் தமது இனத்தைப் பெருக்கக்கூடியதாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனமும் அறிந்துயாக்க நட்பு

-திருக்குறள்.

## நமது நோக்கு

# நிதி வழங்கும் நாடுகளின் கவனத்திற்கு....!

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றினை அமைதிவழியின் மூலம் காண்பது என்பதை தனது உறுதிமிக்க தீர்மானமென்று வெளிப்படையாகப் பிரகடனம் செய்துகொண்டு, விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக முதலில் ஆரம்பித்த போர்நிறுத்த நடைமுறையை, எந்தவித மறுப்போ, நிபந்தனைகளோ இன்றி ஏற்றுக்கொண்டு தானும் அதைத் தொடர்ந்தபோது ஒரு சில விடயங்களைத் தெளிவாகவே புரிந்துகொள்ளமுடிந்தது.

ஆட்சிப்பொறுப்பை தேர்தல் வெற்றியின் பின் ஏற்க நேர்ந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு, அரசைக்கொண்டு நடத்தப்போதுமான நிதி ஏதுமின்றி திறைசேரி காலியாக இருந்தது.

நாட்டின் வளங்கள் அனைத்தையும் மட்டுமல்லாது, சர்வதேச சமூகத்திடம் இருந்து பெற்ற கடன்களையும்கூட போருக்குத் தாரைவார்த்துக்கொடுத்துவிட்ட சந்திரிகா தலைமையிலான அரசு, யுத்தத்தை மேலும் தொடரக்கூடிய மனோபலத்தை போர்க்களத் தோல்விகளின் பின்னர் முற்றாகவே இழந்திருந்த படையினரை மட்டுமே, ரணில் அரசு தலையில் கட்டிவிட்டு நாடாளுமன்றத்தைவிட்டு வெளியேறினார்.

வெறுமையான திறைசேரியை வைத்துக்கொண்டு அரசாங்கத்தையோ, போரில் இழந்துவிட்ட படையினரில் எஞ்சியவர்களில் இராணுவத்தை விட்டுத்தப்பியோடிய பல்லாயிரக்கணக்கானோரை விடவும், ஏனையோரை மட்டும் வைத்துக்கொண்டு போரை நடத்தமுடியாத நிலையில், ரணில் திணறியபோதே புலிகளின் போர் அறிவிப்புடன்கூடிய சமாதான சமிக்ஞைகள் அவருக்கு கைகொடுத்தது எனலாம்.

ஒருவேளை - சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி மீண்டும் பதவிக்கு வந்திருந்தாலும்கூட, விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவிப்புடன் இணைந்து செயற்பட்டு சமாதான முன்னெடுப்புக்களை ஆதரித்து, அதன்பின்னால் செல்வதை விடவும் மாற்றுத்தேர்வு எதுவும் இருந்திருக்காது என்பதும் நிஜமே.

நீதியற்ற ஒரு, தமிழின அழிப்பு யுத்தத்துக்கு, தேசத்தின் நிதி அனைத்தையும் கொட்டி வரலாற்றில் இரத்தக்கறை படிந்த அவமானகரமான தோல்வியை சில அத்தியாயங்களில் ஆழமாகப் பதிவு செய்ததைத்தவிர வேறெதையும் ஆக்கபூர்வமாகச் செய்திராத சந்திரிகாவின் பேரினவாதஆட்சி மக்களால் நிராகரிககப்பட்டபோது, அவர் நாட்டு மக்கள் அனைவரையும் சர்வதேச நாடுகள் பலவற்றுக்கு நிரந்தரக் கடன்காரர்களாகவும், எல்லா நாடுகளிடமும் தொடர்ந்து பிச்சாபாத்திரம் ஏந்த வேண்டிய பிச்சைக்காரர்களாகவும் மட்டுமே விட்டுச்சென்றார்.

மூலதனம் எதுவுமின்றி, ஏற்கனவே கடன் சிக்கலுள் மூழ்கி அழிந்துகொண்டிருக்கும் வர்த்தக நிலையத்தைப் பொறுப்பேற்க முனைந்த வியாபாரிகளின்நிலையிலேயே ஆட்சியை ஏற்கநேர்ந்த ரணிலுக்கும் கடன்பட்டே அரசாங்கத்தை நடத்தவேண்டிய நிலைஏற்பட்டபோது, சந்திரிகா கொடுத்துவிட்டுப்போன போர்க் கொடியை ஒரு கிடப்பில் போட்டுவிட்டு வெள்ளைக் கொடியை உயரப் பிடித்துக்கொண்டு யுத்தநிறுத்தத்தைத் தொடர்வதையும், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதைவிட வேறுவழி எதுவும் தென்படவில்லை.

போரில் சிறிலங்காப் படைக்கு வெற்றிகிடைக்க ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள், போர்க்கப்பல்கள், டாங்கிகள், யுத்தவிமானங்கள் எனத் தமது நாடுகளில் ஒதுக்கி வைக்கப்பட்ட அனைத்தையும் கடன் அடிப்படையில் அள்ளிக் கொடுத்த நாடுகள் பலவற்றினதும் அரசியல் உள்நோக்கங்களை நிறைவேற்றிவைக்கக்கூடிய திறன் எதுவும் அவர்களுக்குக் கிடையாது என உணர்ந்து கொள்ளப்பட்டதும், சர்வதேச சமூகமும் சமாதானத்தை வலியுறுத்தத் தொடங்கியமையும் இதற்கு மற்றொரு காரணமாகும்.

போருக்குக் கடன்கொடுத்தோர், இப்போது சமாதானத்துக்கே பெருமளவில் கடனை அள்ளிக்கொடுக்க முன்வந்தமையானது சிறிலங்கா அரசுக்கு ஏற்பட்ட மற்றொரு சர்வதேசத் தோல்வியாகும்.

எனவே - அத்தியாவசிய நிதித்தேவையே சிறிலங்கா அரசை சமாதானம் நோக்கிய நகர்வை வேறு வழியின்றி மேற்கொள்ள நிர்ப்பந்தித்தது என்பதில் ஐயமில்லை.

வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்தது போன்று, சிறிலங்காவுக்கான நிதிவெள்ளம் கரைபுரண்டு சர்வதேசமெங்கும் இருந்து வருவதற்கான சூழல் உறுதியான வேளையில், சமாதானப் பேச்சுக்கள் இடைநடுவில் நிறுத்தப்பட நேர்ந்தமைக்கு சிறிலங்கா அரசின் பொறுப்பற்ற செயல்களே காரணமாகும்.

அதையடுத்து, தொடர்ந்து ஜனாதிபதி - பிரதமர் ஆகியோருக்கிடையேயான அதிகாரப் போட்டி, சமாதானத்தை நிரந்தரமாகவே அற்றுப்போகச் செய்துகொண்டு இருக்கும் நிலையில், இலங்கைக்கான சர்வதேச நிதியுதவி செய்யும் நாடுகள் சமாதானம் தொடர்ந்தால்தான் கடன் உதவியை வழங்கமுடியும் என வலியுறுத்தியுள்ளமையானது, சிறிலங்காவின் பொருளாதாரத்தை சகல வகையிலும் பாதிக்கும் ஒன்றாகிவிட்டது.


அரசியல் நெருக்கடியைக் காரணங்காட்டி உறுதியளித்த நிதியுதவிகளை வழங்க சர்வதேச சமூகம் பின்நிற்கக்கூடாதென - சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ உதவி வழங்கும் நாடுகளிடம் கோரிக்கைவிடுத்துள்ளமைக்கு காரணமும் இதுவே ஆகும்.

சமாதானத்தின் பேரால் மட்டும் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்ட பெருந்தொகை நிதியை, சமாதானத்தை முன்னெடுக்க இயலாத நிலையில் உள்ள அரசிடம் ஒப்படைக்க கடன் வழங்கும் நாடுகள் முன்வரக்கூடாது என்பதுதான் சமாதான ஆர்வலர்கள் அனைவரதும் அபிப்பிராயமாகும்.

அப்படி ஒப்படைக்கப்படும் நிதியானது, எதிர்பார்ப்புக்கு மாறான அசம்பாவிதங்களை ஏற்படுத்தினாலும் ஆச்சரியமில்லை.

ஏனெனில், சிறிலங்காவில் சிங்களப் பேரினவாதம் இன்னும் யுத்த சிந்தனையில் இருந்து துளிதானும் விடுபடவில்லை என்பதையே அண்மைக்கால சம்பவங்கள் பலவும் உணர்த்தி நிற்கின்றன. என்பதாலேயாம்!

## நாடும் நடப்பும்





செய்தி : நாட்டின் பாதுகாப்புக்காக மட்டுமே ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன என்கிறார் ஜனாதிபதி.

### இலங்கை - இந்திய கப்பல் சேவை குறித்து

# தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இடர்பாடுகளைக் களைய உத்தேசித்துள்ளோம்!

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு, தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இடர்பாடுகளை நிவர்த்தி செய்ய உத்தேசித்துள்ளதாக அமைசசர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கீழ்க்கரை திருமண நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் - அங்கு செய்தியாளர்கள் கேட்டிருந்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஏற்கனவே தென்னிந்தியாவிற்கும், இலங்கைக்கும் கப்பல் சேவை ஆரம்பிக்க அறிவிப்பு செய்தவுடன், பயணிகள் தனியார் கப்பல் கம்பனிகள் தயார்நிலையில் இருப்பதோடு, பெரும் முதலீடும் செய்துள்ளனர். இதைக் கருத்தில்கொண்டு துறைமுக அதிகாரசபை - கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி, கொழும்பிலிருந்து கொச்சின் துறைமுகத்துக்குப் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ளோம். இதனால், ஏற்கனவே முடிவுசெய்த தூததுக்குடி - கொழும்பு கப்பல் சேவைத்திட்டம் கைவிடப்படவில்லை.

கடந்த இரண்டு வருடகாலமாக ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக இலங்கை முஸ்லிம்களுக்கும், புலிகளுக்கும் உள்ள உறவு வலுவிழந்துவிட்டது. இதனால், இன்றைய சூழ்நிலையில் வடக்கு - கிழக்குப் பிராந்திய முஸ்லிம்கள் பதற்றத்துடன் உள்ளனர். இலங்கை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாடு காரணமாக, நோர்வே தூதுக்குழுவினர்மூலம் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்து நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில், முஸ்லிம்களும் கலந்துகொள்ள வாய்ப்புக் கொடுக்கவேண்டும். இல்லையெனில், சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றிபெறாது என்பது உறுதி. ஏனெனில்,, கடந்த நான்கு ஆட்சிகள் உட்பட இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு இல்லாமல் யாரும் ஆட்சி அமைக்கமுடியவில்லை.

இலங்கை முஸ்லிம்கள் பிரச்சினையில் இந்திய அரசு பெரும் அக்கறை காட்டிவருகிறது. எந்தச் சூழ்நிலையிலும் விடுதலைப் புலிகளின் மேலாதிக்கத்தில் இலங்கை முஸ்லிம்கள் வாழ நிர்ப்பந்திக்கமுடியாது என்பது தீர்க்கமான கருத்து. இனிமேல் இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் யுத்தம் வராது என்பது உறுதி.

இனிமேல் யுத்தம் ஏற்பட்டால் - அவர்களுடைய மக்களிடமும், சர்வதேச சமுதாயத்திலும் அதிருப்தி ஏற்படும் என்று இலங்கை துறைமுக அபிவிருத்தி, கப்பற்துறை கிழக்கு பிராந்திய அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவருமான ரவூப் ஹக்கீம் நிருபர்களிடம் தெரிவித்தார்.

### அடுத்த வருடம் முதல்

# அரச ஊழியர் வேலைநேரம் காலை 7 மணிமுதல் 2 வரை!

### அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

பொது நிர்வாக சேவையில் 2004 ஆம் ஆண்டுமுதல் மாற்றங்களைச் செய்வதற்கான சிபார்சுகளைப் பொதுநிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் வஜிர அபேவர்த்தன முன்வைத்துள்ளார்.

இதன் பிரகாரம், 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்முதல் ஊழியர்களின் வேலை நேரம் - காலை 7 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், வரவட்டை துளையிடுதல், வரவுப்புத்தகத்தில் கையொப்பமிடுதல் போன்ற பாரம்பரிய நடைமுறைகளுக்குப் பதிலாகப் புதிய நடைமுறைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

ஏறக்குறைய 10 லட்சம் அரசாங்க ஊழியர்கள் தமக்குத் சாதகமான வேலைநேரத்தைத் தெரிவுசெய்துகொள்ளும் தகுதியைப் பெறுவதுடன், தமக்குக் குறித்து ஒதுக்கப்பட்ட வேலையைப் பூர்த்திசெய்தவுடன், அலுவலகத்தை விட்டுச் செல்லவும் வழியேற்படும்.

இதேவேளை, குறிப்பிட்ட திணைக்களம் ஒன்றில் கடமையாற்றும் ஒருவர் மேலதிகக் கொடுப்பனவுகளுடன், பிறிதொரு திணைக்களத்தின் வேலைகளிலும் பங்களிப்புச் செய்யமுடியும்.

எந்தவொரு அரச ஊழியரும் 5 நாட்கள்வேலையை - 3 நாட்களில் நிறைவு செய்வதாயின், அவர் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் ஓய்வெடுத்துக்கொள்ளமுடியும். வரையறுத்த வேலை நேரத்தைவிடவும், குறித்து ஒதுக்கப்பட்ட வேலையைச் செய்துமுடிப்பதே சிறந்ததாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# அரச ஊழியர்களுக்கான சம்பளவுயர்வு ஜனவரி முதல் வழங்குவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 1250 ரூபா சம்பள உயர்வைப் பெறுவார்கள். அரசாங்கம் அண்மையில் அறிவித்த வரவு - செலவுத்திட்ட யோசனைகளுக்கு அமைய, இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளதாகப் பொதுநிர்வாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். திறைசேரியிருந்து இதற்கான பணிப்புரையை எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கம் அறிவித்தபடி, ஓய்வூதியர்களின் 10 சதவீத சம்பள அதிகரிப்பு தொடர்பாக, ஓய்வூதியப் பணிப்பாளர்களுக்கு இதுவரை எந்தவித அறிவித்தலும் கிடைக்காததால், பெப்ரவரி மாதம் அளவில் ஜனவரி மாதக் கொடுப்பனவு அதிகரிப்பையும் சேர்த்து வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வாய் பேசமுடியாத மீனவர் தஞ்சம்கோரி விண்ணப்பம்

வாய்பேசமுடியாத ஆனையிறவைச்சேர்ந்த மீனவர் ஒருவர்- தமிழக அரசிடம் அகதி அந்தஸ்துக்கோரி விண்ணப்பித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்ற டெமோஸ் டேனியல் (வயது 21) என்ற இந்த மீனவர் - தனக்குத் தமிழகத்தில் அகதி அந்தஸ்து தருமாறு கோரியுள்ளார்.

இவர் தனது விண்ணப்பத்தில், தான் 'பாக்பாய்' என்னும் கப்பலில் பணியாற்றியதாகவும், தமிழ்நாடு வந்த அந்தக் கப்பல் - தன்னை விட்டுவிட்டுச் சென்றுவிட்டதாகவும், எனவே தனக்கு அகதி அந்தஸ்து தந்து அங்கு வசிப்பதற்கு, உதவுமாறும் கேட்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜாராமன் - அவரை தூத்துக்குடி தெற்கு காவல்நிலையத்தில் ஒப்படைக்குமாறு அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

## சர்வதேச அரசியல்...



# அமெரிக்கப் படையினரிடம் சதாம் என்ன நடந்தது? இனி....?

(தொடர்ச்சி....)

அமெரிக்கப்படைகளின் பாதுகாப்பில் இருந்தவர் சதாம் தான் என்று அடையாளம் காட்டப்பட்டார். டி.என்.ஏ.பரிசோதனைகள் அதை உறுதிப்படுத்தின. அவர் சாட்சாத் சதாம் ஹுசைனேதான்.

இப்படியாகப் புகைப்படங்கள், விடியோக்கள் சகிதம் எல்லா மீடியாக்களும் அடித்துக்கூறும் சமயத்தில் நாங்கள் சில சந்தேகங்கள் என்று சொல்லுவது வேடிக்கையாகக்கூட இருக்கலாம், ஏன் குழப்பமாகக்கூட இருக்கலாம். எனவே, முதலில் ஓர் விடயத்தைத் தெளிவுபடுத்தி விடுவோம். அமெரிக்கப்படைகளின் காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபர் சதாம் ஹுசைன் என்பதில் சந்தேகம் இல்லை. எல்லோரும் சொல்லுவது போல, சதாம ஹுசைனேதான். அமெரிக்காவே ஆனால்கூட, அந்த விடயத்தில் றீல் விட முடியாது. விட்டால் மாட்டிக்கொள்வார்கள். எங்கள் சந்தேகமேவேறு.

டிசம்பர் 13 ஆம் திகதி மாலை சதாம் ஹுசைன் அமெரிக்கப்படைகளினால் சிறைப் படுத்தப்பட்டார். அதேதினம் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு, அமெரிக்கர் வசம் எடுத்துக்கொள்ளப்பட்டாரா என்பதுதான் எங்கள் சந்தேகம். இப்படிச் சொன்னால் குழப்பமாக இருக்கும். எனவே, அதை வேறு மாதிரிச் சொல்லிப் பார்க்கலாம்.

டிசம்பர் 13 ஆம் திகதி சிறிய பதுங்கு குழி ஒன்றிலிருந்து சதாம் ஹுசைன் -அமெரிக்கப்படைகளின் கையில் அகப்பட்டார் என்பது சரி - அது உண்மை. நாங்கள் கேட்பது எல்லாம் அந்தப்பதுங்குகுழிக்குள் சதாம் ஹுசைன் ஒளிந்து கொண்டிருந்தாரா? சிறை வைக்கப்பட்டிருந்தாரா? என்பது. அதற்கான சாத்

**மறைந்து வாழும் ஒரு நபர் - அதேநேரம் அமெரிக்கப்படைகள் கூறுவதைப் போல இடத்திற்கிடம் மாறிமாறிச் சென்றுகொண்டிருக்கும் நபர் - மறைவிடங்களை அடிக்கடி மாற்றுவதற்கு வெளியே செல்வது அவசியமானது. புகைப்படங்களில் காணப்படும் தாடி, மீசை புழுதிபடிந்து, ஜடாமுடித் தோற்றம் அதற்கு லாயக்கில்லை. வெளியுலகில் நடமாடும் ஒரு நபர் - மற்றவர்களால் எப்போது கவனிக்கப்படுகிறார் என்றால் - மிகமிகப் பகட்டாக இருக்கும்போது அல்லது மகா அழுக்காக இருக்கும் போது. இது சதாமுக்கு நிச்சயம் தெரிந்திருக் கும். அதுவும் அவர் அடிக்கடி இடங்களை மாற்றிக்கொண்டிருக்கும்போது, இந்த அழுக்கான தோற்றத்தை கையில் பிரீப்கேசில் நிறையப் பணமும், ஓரிரு மெய்ப்பாது காவலர்களும் கூடவர, ஈராக்கில் நடமாடியிருந்தால் அது தற்கொலைக்குச் சமானம்.**



தியம் அமையக்கூடிய சந்தர்ப்பம் எப்படி அமையலாம் என்பதைப் பாருங்கள்.

டிசம்பர் 13 ஆம் திகதிக்கு முன்னர், சதாம் நடமாடியபோது, பெருமளவிலான பாதுகாவலர்களுடன் சுற்றவில்லை. எண்ணி ஒன்றிரண்டு பேருடன்தான். மாறிமாறி தனது மறைவிடங்களில் இருந்திருக்கின்றார். அப்படியான நேரத்தில், அந்த ஓரிரு நபர்களும் சதாமை ஏதோ ஓர் விதத்தில் அடைத்துவைத்து விட்டு, அமெரிக்காவிடம் பேரம்பேசி கொண்டிருந்தார்கள் என்பதும்கூட ஓர் சாத்தியம்தான். அவர்கள் சதாமை அடைத்து வைத்திருந்த ஏதோ ஓர் இடம்தான் திக்றிற் அருகிலுள்ள பதுங்கு குழி என்பது சாத்தியம்தான். அப்படியிருந்தால் அமெரிக்கப்படைகள் டிசம்பர் 13 ஆம் திகதி சிறைப்பட்டிருந்த சதாமையே திக்றிற் அருகிலுள்ள பதுங்குகுழியிலிருந்து அமெரிக்கப் படைகள் பிடித்தனர் என்று அர்த்தமாகின்றது.

அதாவது, ஏற்கனவே சிறைப்படுத்தப்பட்டிருந்த சதாமை - அமெரிக்கர்கள் தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்டார்கள் என்றுதான் கூறவேண்டியுள்ளது. சும்மா கதைவிடுகின்றோம் என்று நினைத்துவிடலாம். அதனால், சந்தேகத்திற்கான காரணங்களையும் கூறிவிடுகின்றோம். கேட்டுவிட்டு, யோசித்துவிட்டு சந்தேகங்கள் ஏற்பட நாங்கள் கூறும் காரணங்கள் சரிதானா என்று முடிவெடுத்துக் கொள்ளுங்கள். இது சில விபரீதமான, வில்லங்கமான சந்தேகங்கள்.

சதாம் ஹுசைன் - அமெரிக்கப்படைகளிடம் பிடிபட்டபின்னர், எடுக்கப்பட்ட ஆரம்பப் புகைப்படங்களைப் பார்த்திருப்பீர்கள். அதில் தெரிவது என்ன? சதாமின் தலையைப் பார்த்தால் அவரது தலைமுடி கத்திரிக்கோலை அல்லது சம்பூவைப் பார்த்து பலவாரம் இருக்கலாம் என்று தெரிந்துகொள்ளலாம். மீசை, தாடியின் கதியும் அதுவே. தாடி மாத்திரம் சில இடங்களில் நரைத்திருக்கிறது. ஆனால், தலைமுடியோ கன்னங்கரேல். ஒரு விடயத்தை மறந்துவிடாதீர்கள். சதாம் ஹுசைன் கடந்த காலத்தில் "செல்..ப்" விடயத்தில் மிகவும் கவனமான ஒரு ஆண். இதை அவரது ஆரம்பகால புகைப்படங்களைப் பார்த்தாலே புரிந்துவிடலாம். இதிலிருந்து புரிந்துகொள்ளக்கூடிய விடயம் - அவர் அகப்படுவதற்கு முன்னர் குறைந்தபட்சம் இரண்டிலிருந்து மூன்று வாரங்களுக்குள் தனது தோற்றத்தில் அக்கறைகாட்டாது இருந்திருக்கிறார்.

மறைந்து வாழும் ஒரு நபர் - அதேநேரம் அமெரிக்கப்படைகள் கூறுவதைப்போல இடத்திற்கிடம் மாறிமாறிச் சென்றுகொண்டிருக்கும் நபர் - மறைவிடங்களை அடிக்கடி மாற்றுவதற்கு வெளியே செல்வது அவசியமானது. புகைப்படங்களில் காணப்படும் தாடி, மீசை புழுதிபடிந்து, ஜடாமுடித் தோற்றம் அதற்கு லாயக்கில்லை. வெளியுலகில் நடமாடும் ஒரு நபர் - மற்றவர்களால் எப்போது கவனிக்கப்படுகிறார் என்றால் - மிகமிகப் பகட்டாக இருக்கும்போது அல்லது மகா அழுக்காக இருக்கும் போது. இது சதாமுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். அதுவும் அவர் அடிக்கடி இடங்களை மாற்றிக்கொண்டிருக்கும்போது, இந்த அழுக்கான தோற்றத்தை கையில் பிரீப்கேசில் நிறையப் பணமும், ஓரிரு மெய்ப்பாதுகாவல்களும் கூடவர, ஈராக்கில் நடமாடியிருந்தால் அது தற்கொலைக்குச் சமானம்.

இதிலிருந்து ஊகிக்கக்கூடிய சாத்தியம்- அவர் ஏதோ ஒரு இடத்தில் வாரக்கணக்கில் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம். அடைத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதி- இரண்டிலிருந்து மூன்று வாரத்தில் இருந்திருந்தால், டை பண்ணப்பட்டிருந்த தலை கறுப்பாக இருக்கும். அந்தக் காலப்பகுதியில் தாடி வளர்ந்திருந்தால் அது நரைத்து காணப்பட்டிருக்கும்.

அடுத்த தரவைப் பாருங்கள் - சதாம் கைப்பற்றப்பட்ட பதுங்குகுழியின் வரைபடத்தையும், புகைப்படத்தையும் பார்த்திருப்பீர்கள். மிகவும் சிறியது. ஆறிலிருந்து எட்டு அடி அளவிலுள்ள 'பேசிக் கல்பர்'. இதில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது அதற்கு உள்ளே செல்வதற்கு ஒரே ஒரு வாயில்தான் காணப்பட்டுள்ளது. அந்தக் குறுகிய வழியின் ஊடாகத்தான் பதுங்குகுழிக்குச் செல்லமுடியும், அதிலிருந்தும் வெளியே வரமுடியும்.

அமெரிக்கப் படைகள் சதாமை கைப்பற்றியபோது, அந்த ஒரேஒரு வாயில் மீது பிளேட் ஒன்று போடப்பட்டு, அதன் மேல் பெரிய கற்களும், புழுதியும் வைத்து மறைக்கப்பட்டிருந்தது. இதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். சதாம் பதுங்குகுழியில் இருக்கும்போது, வாயில் மூடப்படவேண்டும் என்று சொன்னால், அதை பதுங்குகுழியின் வெளியில் இருக்கும் ஒருவரால்தான் செய்யமுடியும். அதேபோல், சதாம் பதுங்குகுழியில் இருந்து வெளியே வரவேண்டும் என்றால், அவரால் உள்ளே இருந்து திறக்கமுடியாது. அதற்கும் வெளியே இருக்கும் ஒருவர்தான் திறந்துவிடமுடியும். அவர் கைப்பற்றப்பட்ட பதுங்குகுழியும், அதன் வாயிலும் எவ்வளவு சிறிய இடக்கு முடக்கான இடம் என்பதை மேலும் ஊகிக்கவேண்டும் என்றால் ஒரு விடயம் -

அமெரிக்கப் படைகள் சதாமைக் கண்டு பிடித்த பின்னரும், அவர்களால் வெளியில் இருந்து வாயில் திறக்கப்பட்ட பின்னரும் சதாமால் தானாகவே வெளியேவரமுடியவில்லை. வெளியே இருந்தவர்கள் கைகொடுத்து வெளியில் தூக்கிவிடவேண்டியிருந்தது. அப்படித் தூக்குகின்றபோதுகூட, சதாம் ஹுசைனின் நிலை - பதுங்குகுழியின் உட்புறச்சுவரிலும், வாயிலிலும் மோதி இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், அந்தப் பதுங்குகுழி சர்வசாதாரணமான ஒரு நிலத்தடித் துவாரம்.

சதாமைப் போன்ற ஒருவர் கடந்தகாலத்தில் தனது பாதுகாப்புக்காகப் பல நிலத்தடிப் பதுங்குகழிகளைப் பல வசதிகளுடன் அமைதது வைத்திருந்த நபர் - தனது மெய்ப் பாதுகாவலர்களையே நம்பாது, தனது உருவ ஒற்றுமையுடைய டபிள்ஸ்களை நடமாடவிட்டிருந்த ஒருவர். இப்படியான கச்சடா பதுங்கு குழி ஒன்றுக்குள் இறங்குவாரா? அதுவும் உள்ளே போனால் வெளியில்வர வேறு ஒருவரின் துணை இல்லாவிட்டால் முடியாது என்றநிலையில், யாரை நம்பி உள்ளே இறங்கியிருப்பார்.

அதைவிட அடுத்த விடயம் உள்ளே இருந்த சதாமிடம் இரண்டு ஏ.கே. 47 ரைபிள்களும், ஒரு பிஸ்டலும் இருந்திருக்கிறது. ஒரு பிரீப்கேசில் 71/2 இலட்சம் அமெரிக்க டொலர்கள் பணம் இருந்திருக்கிறது. ஆனால், எந்த விதமான தகவல்தொடர்பு சாதனங்களும் இல்லை. ஒரு சின்ன ரேடியோவோ, ஆகக் குறைந்தது ஒரு செல்போன்கூடவோ இல்லை.

உள்ளேயிருந்து வெளி உலகத்துடன் தொடர்புகொள்ள புறாமூலம் தூதுவிடக்கூட முடியாதபடி பூட்டப்பட்ட வாயில். அவர் உள்ளே இறங்கிக்கொண்டு, ஒரு நம்பிக்கைக்குரிய நபரை வெளியில் பூட்டச்சொல்லிக் கூறியிருப்பார் என்று ஒரு பேச்சுக்கு வைத்துக்கொண்டாலும், அந்த சாத்தியத்தை இப்படிப்பாருங்கள்.

அமெரிக்கப் படைகள் சுற்றிவளைக்கின்றன என்று தெரியவந்த பின்னர்தானே அவர் பாதுகாப்புக்குழிக்குள் இறங்கியிருப்பார். அதற்குப் பின்னர்தானே வாயிலை மூடிய அவரது நம்பிக்கைக்குரிய ஆள் - அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு ஒளிய ஓடிச்செல்லவேண்டும். அந்தநேரத்தில் அவர் அமெரிக்கப் படைகளின் கைகளில் அகப்பட்டுக்கொண்டாலோ அல்லது சுட்டுக்கொல்லப்பட்டாலோ, பதுங்குகுழியில் இருக்கும் சதாம் எப்படி வெளியில் வருவார். அதுவும், தான் உள்ளே இருக்கும் விடயத்தை, ஒருவருக்காவது தெரிவிக்க ஒரு செல்போன்கூட இல்லாதநிலையில், இது ஒருபோதுமே சாத்தியமில்லாத, நம்பமுடியாத கதை.

சதாம் ஹுசைன் கைப்பற்றப்பட்ட இடம், அதன் அமைப்பு, கைப்பற்றப்பட்டபோது அவரது தோற்றம், கைப்பற்றியபின்னர் அவரது நடவடிக்கைகள், கையில் ஆயுதம் இருந்து போதிலும், மருந்துக்குக்கூட அமெரிக்கப் படைகளை எதிர்க்க முற்படாமை போன்ற எல்லாவற்றையும் ஒன்றாக எடுத்துப்பார்த்தால், அப்போது வரக்கூடிய முடிவு அவர் அங்கு ஒளிந்திருந்தார் என்பதைவிட, அவர் சிறை வைக்கப்பட்டிருந்தார் என்பதுதான். இது எப்படி சாத்தியம் என்றால், இப்படி ஊகிக்கலாம் -

அமெரிக்கப்படைகள் ஈராக்கில் நுழைந்து, சதாம் தலைமறைவான பின்னர் சதாமிடம் இருந்து கிடைத்ததாக சில ஓடியோ கேம்ஸ் கிரபிக்ஸ் ஊடகங்கள் மூலமாக ஒளிபரப்பப் பட்டன. இந்த வகையில் ஒளிபரப்பப்பட்ட சதாம் ஹுசைனின் ஓடியோ கேம்ஸ் ஒன்று இந்த மாதம் 11 ஆம் திகதியில் அல் அரேபியா ரீ.வியில் ஒளிபரப்பப்பட்டது. வெளியுலகத்திற்கு உத்தியோகபூர்வமாக வந்து சேர்ந்த சதாம் ஹுசைனின் கடைசிச் செய்தி அது. அதன் பின்னர், சதாம் பகிரங்கமாக எங்கும் தோன்றவும் இல்லை, அவரின் குரல் பகிரங்கமாக எங்கும் கேட்கவுமில்லை.

சதாம் சிறை வைக்கப்பட்டிருந்தால், நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னதான எந்த ஒரு தினத்தில் சிறை வைக்கப்பட்டிருக்கவேண்டும். டிசம்பர் 13 ஆம் திகதி அமெரிக்கப் படைகளிடம் அவர் அகப்பட்டபோது, அவரின் தோற்றத்தை வைத்துப் பார்த்தால், அவர் சுமார் 2 அல்லது மூன்று வாரங்களுக்கு எங்கோ அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

அவரை யார் சிறை வைத்திருக்கமுடியும். நிச்சயமாக அமெரிக்கா அல்ல. சிறை வைத்திருப்பதானால், அவரின் சொந்த ஆட்களே அவரைச் சிறையில் வைத்திருக்கலாம். (அவருடைய நெருங்கிய உறவினர்களோ, அல்லது மெய்ப் பாதுகாவலர்களோ) காரணம் என்ன? பணமாக இருக்கலாம் - 25 மில்லியன் அமெரிக்க டொலர். அது அமெரிக்கா - சதாமை உயிருடனோ அல்லது உயிரற்ற நிலையிலோ கைப்பற்றுவதற்காக அறிவித்திருந்த பரிசுத்தொகை. ஒரு விடயம் சொல்லுகின்றேன். இருந்து பாருங்கள் - இந்த 25 மில்லியன் பரிசுத்தொகை பற்றிய பல்வேறு வாதங்கள், விவாதங்கள், வில்லங்கங்கள் எல்லாம் அடுத்துவரும் மாதங்களுக்குள் சர்வதேசரீதியில் அடிபடப்போகின்றன.

உளவு வட்டாரங்களில் பேசப்படும் ஒரு தகவல் - சதாமுக்கு நெருங்கிய உறவினர்களோ, மெய்ப்பாதுகாவலர்களோ, யாரோ ஒரு 'ஸ்ரா..ப்' மூன்றாவது நபர் ஒருவர்மூலமாக நவம்பர் மாத இறுதியில் ஒரு தினம், ஈராக்கிலுள்ள அமெரிக்க உளவுப்பிரிவு தலைமையுடன் இந்தப் பரிசுத் தொகைபற்றிய இரகசியப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்ததாகச் சதாம் கைப்பற்றப்படமுன்னரே கூறப்பட்டது. இதனால், நவம்பர் மாத இறுதிப் பகுதியிலேயே அமெரிக்கா சதாமை நெருக்கிவிட்டதாகக் கூறப்பட்டது.

டிசம்பர் மாதம் முதலாம் வாரத்தில் 25 மில்லியன் பரிசுப் பணத்தை எந்தவித நிபந்தனைகளும் இன்றி, கேள்விகளும் இன்றி அமெரிக்கா கொடுக்கத் தயாராக இருந்தால்- சதாமை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக ஒரு பேரம்பேசப்பட்டதாகவும் தகவல் உண்டு. இதற்காகத்தான் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் - நேரடியாக ஈராக் வரை டிசம்பர் மாதம் சென்றார் என்று கூறப்பட்டது. ஆனால், அமெரிக்காவிற்கு 25 மில்லியன் அமெரிக்க டொலரையும், சதாம் ஹுசைனையும் பேரம் பேசிய ஆட்களிடம் பண்டமாற்று செய்து கொள்வதில் ஒரு தயக்கம் ஏற்பட்டதாகவும், முடிவெடுக்க அமெரிக்கா நாட்கணக்கில் அவகாசம் எடுக்கத் தலைப்பட்டதாகவும் சொல்கின்றார்கள்.

என்ன காரணம்? 25 மில்லியன் பணம் அமெரிக்காவிற்கு ஒரு பெரிய தொகையா? காரணம் அதுவல்ல. அமெரிக்கா இப்போது ஈராக்கில் செலவுசெய்யும் பணத்துடன் ஒப்பிடுகையில், 25 மில்லியன் டொலர் ஒரு அற்பமான தொகை. அமெரிக்கா இந்த பண்டமாற்றுக்குத் தயங்கியதன் காரணம் அதுவல்ல. வேறு இரு காரணங்கள்.

முதலாவது காரணம் - கோடிக்கணக்கில் செலவுசெய்து, லட்சக் கணக்கில் ஆள், அம்பு, சேனை சகிதம் மாதக்கணக்கில் ஈராக்கில் முகாம் இட்டு இருந்தும், சதாமைக் கைது செய்வதற்குச் சதாமிடம்கூட இருந்தோர் - பணத்திற்கு ஆசைப்பட்டு காட்டிக்கொடுத்தால்தான் முடியும் என்று சொன்னால், ஏற்க கௌரவமாக இருக்காது. சர்வதேச சகலகலா வல்லவன் இமேஜுக்குப் பெருமை சேர்க்கவேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, சதாமை பண்டமாற்று மூலமாக, தான் பெற்றுக்கொண்டால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜோர்ஜ் புஷ்ஷையும் பண்டமாற்றுச் செய்துவிடுவார்கள் புதிய ஜனாதிபதியுடன். (தொடரும்...)

**கனடாவிலிருந்து ரிஷி**

# தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகுவதாக ம.தி.முகவும் அறிவிப்பு!

(சென்னை)

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகிக்கொள்வதாக வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் அறிவித்தது.

அ.தி.மு.கவுடன் கூட்டணிசேர பா.ஜ.க முயன்று வருவதே தமது இந்த முடிவுக்குக் காரணம் என ம.தி.மு.க. தெரிவித்தது.

ம.தி.மு.கவின் மாவட்டச் சொயலாளர்கள் கூட்டத்துக்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய அந்தக் கட்சியின் அவைத் தலைவர் எல்.கணேசன் இது குறித்துத் தெரிவிக்கையில்,

கூட்டணியில் இருந்து விலகும் முடிவை ம.தி.மு.க. மறுபரிசீலனை செய்யாது. பா.ஜ.கவுடனான எங்களது உறவு சுமுகமாகவே இருந்தாலும் அவ்வப்போது மோதலும் இருந்து வந்தது

ஆனால் மக்கள் விரோத பாஸிச அதி.மு.கவுடன் கூட்டணிசேர பா.ஜ.க முயணறு வருவதுதான் எங்களது விலகலுக்கு முக்கிய காரணம்.

இந் நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் நாங்கள் நீடித்தால் எங்களது கட்சியின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையே சிதைந்து போய்விடும்

திராவிட இயக்கத்தைக் கட்டிக்காக்க தி.மு.கவுடன் நாங்கள் இணைந்து பணியாற்றுவது அவசியம் என்பதை உணர்ந்ததால்தான் இந்த முடிவை எடுத்தோம் இப்போது எங்களுக்கும் தி.மு.க.வுக்கும் இடையே நல்ல உறவு நிலவுகின்றது.

தமிழகத்தில் எங்கள் கூட்டணிக்கு கருணாநிதி தான் தலைவர். எங்களது நலன்களை கருணாநிதி பாதுகாப்பார். தமிழகத்தைப் பொறுத்தவரை அடுத்த தேர்தல் என்பது கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையிலான போட்டிதான்

'பொடா' மறு ஆய்வுக் குழு என்ன முடிவு எடுக்கும் என்று எங்களுக்கு தெரியாது. ஆனால் நீதிமன்றம் மூலம் வை.கோவை ஜனவரி இறுதிக்குள் விடுவித்துவிடுவோம். 'பொடா' விடயத்தில் பிரதமர் வாஜ்பாய் ஏதும் செய்யமுடியாத நிலையில் இருக்கிறார். இதனால் தான் வைகோ தொடர்ந்து சிறையில் இருக்க வேண்டியதாயிற்று.

எக்காரணம் கொண்டும் வைகோ பிணையில் வெளியே வரமாட்டார். அவரை நீதிமன்றம் விடுவிக்கும்

தி.மு.கவைப்போலவே நாங்களும் பிரச்சினையின் அடிப்படையில் தான் மத்திய அரசுக்கு இனி ஆதரவு தருவோம் என்றார்

தி.மு.க. - காங்கிரஸ் இடையே கூட்டணி வந்தால் அதில் ம.தி.முக.வைச் சேர்க்க காங்கிரஸ் முன்வருமா என்று கேட்டபோது ஊகத்தின் அடிப்படையிலான கேள்வி இது. இதற்கு நான் பதிலளிக்க விரும்பவில்லை என்றர்.

தி.மு.க.வும் ம.தி.மு.கவும் இணையுமா என்று கேட்டபோது இதுவும் ஊகமான கேள்விதான் ம.தி.மு.கவும. தி.மு.கவும் இந்திய கம்யூனிஸ்ட், மார்கஸிஸ்ட கம்யூனிஸ்ட் போல செயற்படுவோம் என கருணாநிதி ஏற்கனவே கூறியிருக்கிறார் என்றார்

மத்திய அமைச்சரவையில் இருந்து விலகினால் உங்களை அ.தி.மு.க. அரசு முன்பே திட்டமிட்டபடி 'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்ய வாய்ப்புள்ளதே என்று மத்திய அமைச்சர் கண்ணப்பனிடம் கேட்டபோது,

அது குறித்து எனக்கு பயமில்லை. என்னைக் கைதுசெய்ய விரும்பினால் தாராளமாகக் கைது செய்யலாம் எனக்கு அது குறித்து அச்சமோ கவலையோ இல்லை என்றார்.

## சோனியா காந்தியின் தலைமையை கூட்டணிக் கட்சிகள் ஏற்காது என்கிறார் வெங்கையா நாயுடு!

(புதுடெல்கி)

மக்களவைத் தேர்தலுக்கு முன், காங்கிரஸ் கட்சியின் சார்பில் பிரதமருக்கான வேட்பாளரை அறிவிக்கப் போவதில்லையென்று அந்தக் கட்சியின் தலைவர் சோனியா காந்தி கூறியிருப்பது அவரது தலைமையை கூட்டணிக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளாது என்பதையே காட்டுவதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

திருவனந்தபுரம் செல்லும் வழியில் சென்னை விமானநிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், காங்கிரஸ் கட்சிக்குத் தலைவர் இல்லை. தலைவர் இல்லாத கட்சியான காங்கிரஸை வழிநடத்திச் செல்லும் சோனியா காந்தி, கூட்டணிக்கட்சிகளுக்கும் பிரதமர் பதவியை விட்டுக் கொடுக்கத் தயார் என்று விரக்தியுடன் கூறியுள்ளார்.

பிரதமரை மக்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று, மும்பையில் பேசியிருக்கின்றார். தேர்தல் அறிவிக்கப்படும் முன்பே அவருக்குத் தோல்வி குறித்த பயம் வந்துவிட்டதை இது காட்டுகின்றது. வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையை இழநததால்தான் கூட்டணிக்குத் தலைவர் யார் என்பதை அறிவிக்க காங்கிரஸ் தயங்குகின்றது.

இப்படிப்பட்ட கட்சிக்கு மக்கள் எப்படி வாக்களிப்பார்கள்? வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வாஜ்பாயை முன்னிறுத்தியும், வாஜ்பாய் அரசின் சாதனைகளை விளக்கிக் கூறியும் வாக்குக் கேட்போம்.

காங்கிரஸ் கட்சியின் 45 ஆம் ஆண்டு கால ஆட்சியின்போது ஊழல், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகியவைதான் செழிப்போடு இருந்தன.

தமிழகத்தில் கூட்டணி குறித்து இதர கட்சிகளுடன் பேசுவதற்கு இன்னும் காலம் உள்ளது என்றார்.

## ஈராக்கிற்கு வழங்கப்பட்ட கடன் தொகையை மீளப் பெறுவதில்லை என ஜப்பான் முடிவு!

(ரோக்கியோ)

ஜப்பானியப் பிரதமர் யூனிசிரோ கொய்சுமிக்கும் அமெரிக்கத் தூதுவர் ஜேம் பெக்கறாக்னுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, ஈராக்குக்கு கடன் கொடுத்த நாடுகள் அவற்றை மீளப்பெறுவதில்லை என்ற முடிவுக்கு தானும் உடன்பட்டுள்ளதாக ஜப்பானியப் பிரதமர் தெரிவித்தார்.

ஜப்பான் 5 பில்லியன் டொலர் நிதியை ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளுக்கு வழங்க முன்வந்திருந்தது. அத்துடன் 1000 இற்கும் மேற்பட்ட படையினரை புனர்நிர்மானப் பணிக்கு அனுப்புவதற்கும் திட்டமிட்டுள்ளது.

வெளிநாடு ஒன்றில், உதவிப்பணிகளுக்கு 1945ஆம்ஆண்டின் பின் படை வீரர்களை அனுப்பு வதற்கு ஜப்பான் முன்வந்துள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

ஈராக்கில் 1970 ஆம் ஆண்டுக்கும் 1980 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், வைத்தியசாலைகள், மின்சக்தி நிலையங்கள் என்பன ஜப்பானிய தனியார் கம்பனிகளினால் அமைத்துக் கொடுக்கப்பட்டபோது ஏற்பட்ட செலவை ஜப்பானிய அரசு ஏற்றிருந்து. மேலும் 2 ஆம் உலக யுத்தத்தின் பின் எந்தவொரு நாட்டினதும் உள்நாட்டுப் பிரச்சினைகளின் தீர்வுக்கு தனது படைகளை அனுப்புவதில்லை என்ற முடிவை ஜப்பான் எடுத்திருந்தது.



ஆனால், போர் தவிர்ந்த வேறு பணிகளுக்கு படையினரை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு ஜப்பானில் கொண்டுவரப்பட்ட புதிய சட்டம் வழிவகுத்திருந்தது.

இருந்தபோதிலும், அண்மையில் ஜப்பானில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பொன்றில் மூன்றிலிரண்டு பங்கு ஜப்பானியர்கள் ஈராக்குக்கு படைகளை அனுப்புவதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.




## ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்; 4 பொலிஸார் உட்பட 6 பேர் உயிரிழப்பு!

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்துள்ள விமான நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றில் பொலிஸ் அதிகாரிகள் நால்வர், பாதுகாப்பு அதிகாரி ஒருவர் உட்பட ஆறுபேர் பலியாகினர்.

தற்கொலைக்குண்டுதாரி ஒருவரை பொலிஸார் கைதுசெய்ய முயன்றபோது அவர் குண்டை வெடிக்கவைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் பிரத்தியேக பாதுகாவலர் ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் கட்டடம் தாக்கப்பட்ட நான்கு நாட்களுக்குப்பின் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானின் அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரும் நேரத்தில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் இடத்துக்கு அருகில் அமைந்துள்ள பிரதேசத்தில் இரண்டு தாங்கிகள் சகிதம் 100 இற்கு மேற்பட்ட படையினர் காவல் கடமைகளில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருவாரங்களாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின் அரசியல் அமைப்பிற்கான வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈரானில் ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சி; மீட்புப் பணிகள் இடைநிறுத்தம்!

(தெஹ்ரான்)

ஈரானின் பாம் நகரில் ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சியின் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களைத் தேடும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பூமி அதிர்ச்சியில் தப்பிப் பிழைத்தவர்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 3 நாட்களாக கடும் குளிரில் அவலப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு நீர், உணவு, உறைவிடம் ஆகிய மூன்றுமே உடன் தேவையாக உள்ளதென ஈரானிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனிடையே, இந்த பூமி அதிர்ச்சியில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆயிரம் என அதிகாரபூர்வ செய்திகள் தெரிவித்தன.

ஆனாலும் இறந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆயிரம்வரை இருக்கலாமென பாம் நகரம் அமைந்துள்ள மாகாணத்தின் ஆளுநர் மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்ய அமெரிக்கா உட்பட பல நாடுகள் முன்வந்துள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போர்வைகள், கூடாரங்கள், மின்பிறப்பாக்கிகள் என்பவற்றை அனுப்பிவைத்துள்ளது.

இதனிடையே பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளதாகவும், இறந்தவர்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டு உடனடியாக அகற்றப்படாதுவிடில் தொற்றுநோய்கள் பரவும் பாரிய ஆபத்து ஏற்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்கிக் கொண்டிருந்த ஹெலிகொப்ரர் ஒன்று விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மேற்குக்கரையிலுள்ள குடியேற்றங்கள் நான்கினை அகற்ற இஸ்ரேல் முயற்சி!

### பிரதமர் ஷரோன் கைச்சாத்திட்டுள்ளதாக அந்நாட்டு வானொலி அறிவிப்பு

பலஸ்தீன மேற்குக்கரைப் பகுதியில் அமைந்துள்ள அதிகாரமற்ற குடியேற்றங்கள் நான்கை அகற்றுவதற்கு இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் கைச்சாத்திட்டுள்ளதாக இஸ்ரேலிய தொலைக்காட்சி அறிவித்தது.

இஸ்ரேலின் தனது புதிய எல்லைகளை விஸ்தரிப்பதற்காகவே இவ்வாறான திட்டங்களைத் தீட்டிவருவதாகவும், இந்த நடவடிக்கைக்கு தமது எதிர்ப்பை வெளிக்காட்டப் போவதாகவும் குடியேறியவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - காஸாப் பகுதியில் அமைந்துள்ள யூதர்கள் குடியிருப்புப் பகுதி ஒன்றில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் பலஸ்தீனர்கள் மூவர் உயிரிழந்துள்ளதாகக் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட 'சமாதானத்துக்கான பாதை' வரைவு தோல்வி அடையும் நிலையில் உள்ளதால், ஒரு தலைப்பட்சமான முடிவுகளைத் தான் எடுக்க நேரிடலாம் எனவும்,

இஸ்ரேலியப் படையினர் முகாம்களை அமைப்பதற்கு ஒழுங்குகள் செய்யவுள்ளதாகவும் ஏரியல் ஷரோன் தெரிவித்தமைக்கு அமெரிக்க, பலஸ்தீனத் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் ஒரு தலைப்பட்சமான எந்தவொரு முயற்சியும் தம்முடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே செய்யப்பட வேண்டுமென வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



## பிகல் -2 விண்கலத்துடன் இதுவரையும் தொடர்புகள் ஏற்படுத்தப்படவில்லையாம்!

### விஞ்ஞானிகள் தெரிவிப்பு

பிரிட்டனில் தயாரிக்கப்பட்டு செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த பிகல்-2 என்ற கலம் தொடர்ந்தும் தகவல்கள் எவற்றையும் அனுப்பவில்லை எனவும் செவ்வாய் கிரகத்தை சுற்றி வலம் வந்துகொண்டிருக்கும் பிறிதொரு கலமான "ஓடிசி", பிகல் - 2 தரையிறங்க திட்டமிட்டிருந்த பகுதியை இதுவரை நான்கு முறை கடந்து சென்றுள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இதனால் இந்தக் கலத்துக்கு என்ன நடந்திருக்கலாம் என்பதை அறிவதற்கு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தக் கலத்தை வடிவமைப்பதில் முன்நின்று செயற்பட்ட "அலன் வெல்டி" காரணத்தை அறிவதில் ஈடுபட்டுள்ளார். பிகல கலத்தில் நேரத்தை ஒழுங்குபடுத்தும் கருவியில் தவறுகள் ஏற்பட்ட..ல் பல உபகரணங்கள் உரிய முறையில் செயற்பட முடியாது போகலாம். எனவே நேரத்தைச் சரி செய்வதற்கான கட்டளைகளை "ஓடிசியின்" மூலம் அனுப்பியதாகவும் ,விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

உலகின் அனைத்துப் பாகங்களிலும் தொலைநோக்கு கருவிகள் உதவியுடன் பிகல்-2 கலத்தைத் தேடும் பணி நடைபெறுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




'பிறக்கப்போகும் புத்தாண்டு தேர்தல் ஆண்டாகப் பிறக்கப்போகுது என்று ஜனாதிபதி சந்திரிகா சொல்லிவிட்டாரே...!'

'பிறகென்ன... அரசியல் கட்சிகளெல்லாம் தூக்கம் கலைஞ்சு எழுந்து சுறுசுறுப்பாகி கொள்கை கோதாரியென்று கூச்சல்போடத் தொடங்கப்போகினம் என்று சொல்லு...'

'நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைச்சு தேர்தலை நடத்தப் பயப்படும் சந்திரிகா அம்மையார்... மாகாணசபைத் தேர்தலை நடத்தி தனக்கான ஆதரவுப் பலத்தை நாடிபிடிச்சுப் பார்க்கப்போகிறாபோலை...'

'அட... சரியா அரசியல் கணக்குப் போட்டெல்லோ பேசிறாய் மணியம்... மாகாணசபைத் தேர்தலில் வெற்றிகிடைச்சு நம்பிக்கை வந்தா பொதுத் தேர்தலையும் சூட்டோடை நடத்துவா... என்ன நான் சொல்லுறது சரிதானே...!'

'அதோட ஜே.வி.பியோட கூட்டுச்சேர்ந்து மாகாணசபைத் தேர்தலை நிண்டு ஜெயிச்சா... கூட்டைத் தொடருவா... இல்லாட்டி வெட்டிப்போடுவா...'

'சமாதானத்தைத் தான் அவவும் வலியுறுத்துவா... ஆனால், எப்படி அதைக்கொண்டுவருவா என்று சொல்லமாட்டா...'

'அப்படியென்றால் ரணில் என்ன செய்யப்போகிறார்...'

அவர் மறுபடியும் சமாதானத்தைச் சந்திரிகாதான் குழப்பிவிட்டார் ... சமாதானம் இன்றி சர்வதேசம் உதவி செய்யாது மீண்டும் சண்டை ஏற்பட்டா இனி சமாதானத்திற்கே இடமிராது என்று கூறுவார்...'

'அப்ப வரப்போகிற தேர்தல்களும் சமாதானத்திற்கான தேர்தல் தான் என்று சொல்லு...!'

'ஓமோம் சிறிலங்காவிலை யுத்தம் என்றாலும் தேர்தல் என்றாலும் சமாதானத்தின் பேரால்தான் நடத்தமுடியும்'

தெருவிளக்கு

# குடாநாட்டில் 24 எய்ட்ஸ் நோயாளிகள் இவர்களில் 18பேர் உயிரிழந்துள்ளனர்

## தமிழீழ சுகாதார பிரிவைச் சேர்ந்த அமுதம்

(கொக்குவில்)

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 24 எய்ட்ஸ் நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 18பேர் மரணித்துள்ளனர். ஆயினும் எய்ட்ஸ் தொற்றுக்கு ஆளானவர்கள் எம்மத்தியில் இன்னமும் அதிகமானோர் இருக்கலாமென அஞ்சப்படுகின்றது என -

நேற்று முன்தினம் பிற்பகல் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர்சங்க உறுப்பினர்களுக்கான எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் சுகாதாரப் பிரிவைச்சேர்ந்த இ.அமுதம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் - 'இந்த எச்.ஐ.வி. வைரஸ்கள் நான்கு வகையான முறைகளில் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாகவும் அதில் ஒன்று சிகை அலங்கரிப்புக்காகப் பயன்படுத்தும் சவர அலகு என்றார்.

தமிழீழ சுகாதாரப்பிரிவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் செ.குணாளன் பேசுகையில் :

'இந்த நோய் கடந்த ஏழுவருடங்களுக்கு உட்பட்ட காலத்திலேயே யாழ்.மாவட்டத்தில் அதிவேகமாகப் பரவத் தொடங்கியதை எமது ஆராய்ச்சிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தக் காலகட்டத்தில் படையினர் இம் மண்ணை ஆக்கிரமித்திருந்ததும் ஒரு காரணமாகலாம் என்றார்.

கருத்தரங்கிற்கு சிகை ஒப்பனையாளர் சங்கத் தலைவர் க.ஶ்ரீராஜன் தலைமை தாங்கினார். யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (206)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்

மோட்டார் சைக்கிள் ஒன்றும், சைக்கிள் ஒன்றும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் கரவெட்டி மண்டான்வீதியிலுள்ள சந்தியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த வீரசிங்கம் சிறிதரன் (வயது 31) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தநிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவரது ஒரு கையும், ஒரு காலும் முறிவடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. சைக்கிளில் வந்தவருக்கு சிறு காயங்களே ஏற்பட்டன. (121)

# மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்துங்கள்!

## ஜே.வி.பி. உறுப்பினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்டணி ஏற்பட்டவுடன் மாகாண சபைகளுக்கான தேர்தலை ஜனாதிபதி நடத்த வேண்டுமென சில ஜே.வி.பி. உறுப்பினர்கள் ஜனாதிபதியை வற்புறுத்தியுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்த வேண்டுமெனக் கோரி கடிதம் ஒன்றையும் கொடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. மாகாண சபைத் தேர்தலுக்குபின் பொதுத்தேர்தலை நடத்தினால் தாம் அந்த தேர்தலை சந்திக்கத் தயாராகவுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையே கூட்டணி ஏற்பட்ட உடன் பொதுத்தேர்தலை ஜனாதிபதி நடத்தவேண்டுமென மற்றும் சில ஜே.வி.பி உறுப்பினர்கள் ஜனாதிபதியை வலியுறுத்தி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கிறிஸ்தவ தேவாலயம் தாக்கப்பட்டமைக்கு சந்திரிகா குமாரதுங்கா கடும் கண்டனம்!

(கொழும்பு)

சமீபத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்தார்.

திட்டமிட்ட குழுவொன்று கடந்த சனிக்கிழமை நீகொட பிரதேசத்தைச்சேர்ந்த கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை சேதமாக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்து அறிந்த உடனேயே, பொலிஸ்மா அதிபரை தொடர்பு கொண்டு ஜனாதிபதி மேலதிக விபரங்களைக் கோரியிருக்கின்றார். அத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறும், பணித்துள்ளார்.

இதுபற்றி ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில் - இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் நிகழ்ந்த இந்தக் கலவரங்களின் விளைவாக ஏற்பட்ட யுத்தம், வடக்கு - கிழக்கு மாத்திரமல்ல நாட்டின் அனைத்து பாகங்களிலும் இயல்பு வாழ்க்கையை பாதித்தது. இன நெருக்கடி காரணமாக ஏற்பட்ட விளைவிலிருந்து நாங்கள் இன்னமும் மீளவில்லை. அத்தகைய பின்னணியில் மதக்கலவரங்கள் ஏற்படுவதற்கு ஒரு சில கடும்போக்குவாதிகள் மேற்கொள்ளும் முயற்சிகளை எந்தவகையிலும் அங்கீகரிக்கமுடியாது. இத்தகைய கடும்போக்குச் செயல்களால், அனைத்து இலங்கையர்களுக்கும் பெருத்த அவமானத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்று அவர் குறிப்பிட்டார். (01)

# வவுனியா மாவட்டத்தில் குற்றச்செயல்களைத் தடுக்க மாவட்ட நீதிமன்றில் கூட்டம்

வவுனியாவில் நடைபெறும் குற்றச்செயல்களைத் தடுப்பது தொடர்பான கூட்டமொன்று நேற்று மாலை 3 மணிதொடக்கம் 5 மணிவரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வவுனியா மாவட்ட நீதிபதி இளஞ்செழியன், மேல்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிற்றம்பலம், பொலிஸ் அதிகாரிகள், கிராமசேவகர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் - வவுனியா மாவட்டத்தில் நடைபெறும் கொள்ளைகள், கசிப்பு உற்பத்தி, போதைப் பொருள் பாவனை-விற்பனை, பாடசாலை நேரத்தில் மாணவர்கள் பாடசாலை செல்லாது திரிதல், சட்ட விரோதமாக மரம்கடத்தல் போன்றவற்றினைத் தடுப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பும் கோரப்பட்டது.

இங்கு உரையாற்றிய மாவட்ட நீதிபதி இளஞ்செழியன், கிராமசேவகர்களின் உதவியுடன் கிராமரீதியில் விழிப்புக்குழுக்களை அமைத்து, கிராமங்களில் நடைபெறும் கொள்ளைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். அத்துடன் பொலிஸாருக்கு உள்ள அதிகாரங்கள் போலவே கிராமசேவகர்களுக்கும் உள்ளது. எனவே, அவர்கள் தமது கடமையைச் செய்ய பின்நிற்கக்கூடாது. அவ்வாறு செயற்படமுடியாவிட்டால் அவர்கள் பதவிகளிலிருந்து விலகிச்செல்லாம் என அவர் மேலும் தெரிவித்தார். (03)

# நாட்டின் அபிவிருத்திப் பணிக்கு என ஐரோப்பிய யூனியன் 100 கோடி உதவி

(கொழும்பு)

இலங்கைக்கு 100 கோடி ரூபாவை மேலதிக உதவியாக வழங்க ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்றம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

தற்போது நாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிக்கே, இந்த நிதிஉதவி வழங்குவதாக ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடாளுமன்ற வரலாற்றில் வரவு செலவுத்திட்டம் வகுக்கும்போது இலங்கை மீது கவனம் செலுத்தப்பட்டது இதுவே முதறதடவை.

ரோக்கியோவில் நடந்த இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட நிதிக்கும் புறம்பாக மேலதிகமாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாராட்டு விழா நிகழ்வு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர்கோட்ட அரசியற்துறையினரின் ஒழுங்குபடுத்தலில் கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவிருந்த எய்ட்ஸ் பிரசாரத்தில் ஈடுபட்டோருக்கு பாராட்டுவிழா யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று நல்லூர்கோட்ட அரசியற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## புலிகள் உறுப்பினர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு நகரிலிருந்து வடமேற்காக 38 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மாங்கேணி வீதித்தடையில் வைத்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது.

நேற்றுமுன்திம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கைதானவரின் பெயர் ரெஜி எனவும், அவர் இராணுவச் சீருடையுடன் சென்றதாலேயே கைதுசெய்யப்பட்டதாகவும் படைத்தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் றெஜி பொலிஸாரின் பாதுகாப்பில் தற்போது உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

A/L 2006
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி – 10
சனி காலை 8 மணி
DMI
யாழ்.நகர்
(சி-1993)

SPOKEN ENGLISH
WITH GRAMMAR
LECTURES BY :-
MR.H.A.HARY
புதிய பிரிவு ஆரம்பம்
01.01.2004 வியாழன்
மாலை 4.00 மணி
Sunday / Saturday } 3 p.m - 4 p.m
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.
(சி/ 1992)

# வலுவான முஸ்லிம் கட்சியை அமைப்பதுபற்றி ஆலோசனை

## முக்கிய தலைவர்கள் பங்கேற்பு

தற்போதுள்ளதை விடவும் பலம் வாய்ந்ததாக முஸ்லிம்கட்சி ஒன்றை அமைக்க வேண்டும் என, முஸ்லிம் தலைவர்களால் அண்மையில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு முஸ்லிம் கட்சியை பலமுள்ளதாக ஆக்குவதன் மூலம் எதிர்காலத்தில் சாதகமாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம் - பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியும், அதாவுல்லா அணியினரும் மீளவும் முஸ்லிம் காங்கிரஸில் வந்து இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த இணைப்புத் தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று விரைவில் இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதனிடையே இந்த மூன்று பிரிவினருக்கிடையே அண்மையில் நடந்த சந்திப்பின்போது சாதகமான முடிவுகள் தென்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று பிரிவினைத் தலைவர்களும் விட்டுக்கொடுத்து ஒன்று சேர்ந்தால் நீண்ட காலமாக அவர்களுக்குள் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### காணாமற்...

கையளிப்பதற்காக நீதி அமைச்சிற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களது இந்த மகஜரில் காணாமல் போனவர்கள் தொடர்பில்-அரசாங்கம் எமக்குச் சாதகமான பதிலைத்தரவேண்டும் எனக் கேட்கப்பட்டிருந்தது. மறியற்போராட்டத்தில் ஈடுபட்டடோர் பல சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் நின்றதோடு, காணாமற் போனவர்களின் படங்களையும் வைத்திருந்தனர்.

### ஒஸ்ரின்...

வும், இந்த கூட்டத்தில் திர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக்கூட்டத்தில் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தலைமையிலான குழுவினரும் கலந்துகொள்வதாக இருந்த போதும், இறுதி நேரத்தில் அவர்கள் கலந்துகொள்ள முடியாமலேற்பட்டதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

### மதமாற்ற...

இந்த சங்கத்தைச் சேர்ந்த பேச்சாளர் தெரிவிக்கையில் நாங்கள் எமது போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். எனவே புத்தசாசன அமைச்சு மதமாற்றத்தினை எதிர்த்து ஒரு புதிய சட்டத்தினை அமுல்படுத்த வேண்டும்.

இதேவேளை மதமாற்றத்துக்கு எதிரான சட்டமூலம் நாடாளுன்றில் நிறைவேற்றப்படுமாக இருந்தால், எதிர்க்கட்சிகளும் தமது ஆதரவினை வழங்கும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

### மின்சாரக்...

எதுவும் இல்லையெனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் நான்கு மாதங்களுக்குள் மின் கட்டணங்கள் 35 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்குக் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பன கொடுத்த அழுத்தமே காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.12.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.